The Journal of

The Thanjavur Maharaja Serfoji's

SARASVATI MAHAL LIBRARY.

EDITED BY

M. UTHIRAPATHY

Administrative Officer

SARASVATI MAHAL LIBRARY

THANJAVUR.

Vol. XLIII Nos. 3 & 4

PUBLISHED ON BEHALF OF

THE SARASVATI MAHAL LIBRARY

THANJAVUR.

ANNUAL SUBSCRIPTION Rs. 50/-

A. D. 1997

பொருளடக்கம்

✳ முகவுரை — பக்கம்

1. சுவடியியல் தேசியக் கருத்தரங்கம் — 1—6
திரு. எம். உத்திராபதி,
நிருவாக அலுவலர்-துணை ஆட்சியர்.

2. பருவ இதழ்ப் படைப்புகள் — சுருக்க அறிமுகம் — 1—5
— திரு. அ. பஞ்சநாதன், எம். ஏ., எம். எல். ஐ. எஸ்.,
வெளியீட்டு மேலாளர் மற்றும் நூலகர்.

3. உலாப்பதிப்பில் ஒரு சொல் — 1—8
— குடவாயில் பாலசுப்ரமணியன், எம். ஏ.,
காப்பாளர்—நுண்படப்பிரிவு.

4. A Note on Atlases and Maps collections in the Sarasvati Mahal Library, Thanjavur. — 1—6
— **P. Perumal,** B SC.,(SPl.), M.A., M.L.I.SC.
CONSERVATOR.

5. இராமாயண பதிப்புகள் — ஒரு பார்வை — 1—16
— திருமதி. கே. இராமதிலகம், பி. ஏ., எம். எல். ஐ. எஸ்.,
நூலகர் நிலை II.

6. சப்தரிஷிநாடி (நூல் விளக்கம்) — 1—8
— திரு. ம. சீராளன், பி. ஏ., எம். எல். ஐ. எஸ்.,
தொழில்நுட்ப உதவியாளர்—புத்தகப்பிரிவு

7. சுந்தரர் சரித்திரச் சுருக்க அகவல் — 1—12
— திருமதி. ச. திலகம், பி. லிட்.,
தமிழ்ப் பண்டிதர்.

8. ஔவையார் இயற்றிய மூதுரை (ஒப்புமைப் பாடல்களுடன் கூடிய பதிப்பு) — 1—20
— திரு. ய. மணிகண்டன்,
தமிழ்ப் பண்டிதர்.

9. இரண்டாம் ஏகோஜியும் பிரபஞ்சாமிருத சாரமும் *1—20*

— ஸாஹித்ய சிரோமணி
திருமதி. எஸ். இராஜலக்ஷ்மி,
ஸம்ஸ்க்ருத பண்டிதர்.

10. ஸ்ரீ நாராயணதீர்த்தரின் படைப்புகள் *1—31*

— **திரு. ந. விசுவநாதன்,**
முன்னாள் தெலுங்குப்பண்டிதர்.

— வேதாந்த சிரோமணி, தமிழ் வித்வான்
திரு. என். ஸ்ரீநிவாஸன்,
ஸம்ஸ்க்ருத பண்டிதர்.

11. ஸ்வயம்வரா விதானம் *1—30*

— **தேதியூர் திரு. எஸ். கிருஷ்ணமூர்த்தி சாஸ்திரிகள்,**
மேனிலை ஸம்ஸ்க்ருத பண்டிதர்.

12. நக்ஷத்ர மாலிகா *1—10*

— நியாய சிரோமணி
திரு. ஆ. வீரராகவன், *எம். ஏ., பி. எட்.,*
ஸம்ஸ்க்ருத பண்டிதர்.

13. நவமூர்த்தி ப்ரதிஷ்டாவிதி : *1—8*

— நியாய சிரோமணி
திரு. எஸ். சுதர்சனன், *எம்.ஏ.,*
ஸம்ஸ்க்ருத பண்டிதர்.

14. Srotriam Lands to Sri Venugopalaswamy Temple *1—4*

— **R. Vivekanandagopal.**
MODI EXPERT.

The Journal of
The Tanjore Maharaja Serfoji's Sarasvati Mahal Library

Vol. XLIII   A. D. 1997   Saka 1919   No. 3 & 4

முகவுரை

சரசுவதி மகால் நூலகத்தின் ஆராய்ச்சிப் பருவ இதழ்த் தொகுதி 43, பகுதி 3, 4ஐத் தற்பொழுது ஆய்வாளர்கள், அறிஞர்கள் மற்றும் வாசகர்கள் முன் வைப்பதில் பெரு மகிழ்ச்சியுறுகின்றேன்.

இவ்விதழில் பன்மொழிச் சுவடியியல், பதிப்பியல், நூலகவியல், மோடி ஆவணவியல், அருங்காட்சியகவியல் ஆகிய பொருண்மைகளிலான படைப்புகள் இடம் பெற்றுள்ளன.

தமிழ், வடமொழி, தெலுங்கு குறுஞ்சுவடிப் பதிப்புகளும், சுவடிப் பதிப்பாய்வுக் கட்டுரையும், மோடி ஆவணச் செய்திகளும் (ஆங்கிலத்தில்), சரசுவதி மகால் நூலகத்தில் உள்ள நிலப்படத்தொகுப்பு மற்றும் வரைபடங்கள் குறித்த ஆங்கிலக் கட்டுரையும், இந்நூலக நூற்பிரிவில் உள்ள சில நூல்கள்—பதிப்புகள் குறித்த கட்டுரைகளும் இவ்விதழை அணிசெய்கின்றன.

இவ்விதழை எழில்செய்யும் பதிப்பாக்கங்களும் கட்டுரையாக்கங்களும் ஆய்வுலகிற்குப் பயன்மிக நல்கும் வண்ணம் அரிதின் முயன்றும் ஆழ்ந்து உழைத்தும் ஆக்கப் பெற்றுள்ளன. இவற்றைச் சிறப்பான முறையில் படைத்தளித்துள்ள இந்நூலகத்தின் பண்டிதர்கள், அலுவலர்கள் ஆகியோருக்கு என் பாராட்டுகளைத் தெரிவித்து மகிழ்கின்றேன்.

இவ்விதழ் நன்முறையில் வெளிவர ஆவனசெய்துள்ள இப் பருவ இதழின் ஆசிரியரான நிருவாக அலுவலர், திரு எம். உத்திராபதி அவர்களுக்கும், இதழ் வெளியீட்டுப் பணிகளுக்குத் துணை நின்ற நூலகர் மற்றும் வெளியீட்டு மேலாளர் திரு. அ. பஞ்சநாதன் அவர்களுக்கும், இப் பருவ இதழ்ப் பதிப்புப் பணிகளுக்குத் துணைநின்ற தமிழ்ப் பண்டிதர் திரு. ய. மணிகண்டன் அவர்களுக்கும், இப் பருவ இதழினைச் செம்மையாக அச்சிட்டுத் தந்துள்ள நூலக அச்சகப் பணியாளர்களுக்கும் இவ்விதழ் சிறக்க வெளிவர உதவிய ஏனையோருக்கும் என் பாராட்டுகள்.

இவ்விதழினை அறிஞர்களும், ஆய்வாளர்களும், ஆர்வலர்களும் வழக்கம்போலப் படித்துப் பயன்பெறுதல் திண்ணம்.

வி. கு. ஜெயக்கொடி, இ. ஆ. ப.,
மாவட்ட ஆட்சித் தலைவர் மற்றும் இயக்குநர்,
சரசுவதி மகால் நூலகம்.

தஞ்சாவூர்,
22—2—97.

சுவடியியல் தேசியக் கருத்தரங்கம்

திரு. **எம். உத்திராபதி**
நிருவாக அலுவலர் - துணை ஆட்சியர்
சரசுவதி மகால் நூலகம்,

தஞ்சை சரசுவதி மகால் நூலகமும் சென்னை உலகத் தமிழாராய்ச்சி நிறுவனமும் இணைந்து நடத்திய **சுவடியியல் தேசியக் கருத்தரங்கம்** சென்னை உலகத் தமிழாராய்ச்சி நிறுவன வளாகத்தில் 1997 சனவரி, 2, 3, 4 ஆகிய தேதிகளில் நடைபெற்றன.

2—1—97 வியாழன் காலை 10-30 மணிக்கு மூன்று நாள் கருத்தரங்கின் தொடக்க விழா நடைபெற்றது.

தமிழ் வளர்ச்சி — பண்பாட்டுத் துறைச் செயலாளர் திருமிகு வை. பழனிச்சாமி, இ. ஆ. ப., அவர்கள் விழாவிற்குத் தலைமை தாங்கிச் சிறப்பித்தார்கள்.

தஞ்சை இளவரசர் மற்றும் நூலக ஆளுமைக்குழு ஆயுள் உறுப்பினர் திருமிகு துளசேந்திர ராசா சாகேப் அவர்கள் முன்னிலை வகிக்க, நூலக நிருவாக அலுவலர் திரு. எம். உத்திராபதி அவர்கள் தொடக்கவுரையாற்ற, சென்னைப் பல்கலைக்கழகத் தமிழ் இலக்கியத்துறைத் தலைவர் பேராசிரியர் முனைவர் திருமிகு பொற்கோ அவர்கள் வாழ்த்துரை வழங்க விழா சிறப்புற நடைபெற்றது.

இவ்விழாவில், ஐரோப்பிய நூலகங்களில் இடம்பெற்றுள்ள தமிழ் ஓலைச்சுவடிகள் குறித்து 1959 ஆம் ஆண்டு அரசுக்கு அறிக்கையளித்து, தமிழ் உலகிற்கு வெளிப்படுத்திச் சுவடியியலுக்குத் தொண்டாற்றிய தஞ்சைப் பேராசிரியர் மேஜர் திருமிகு அ. கிருட்டிணமூர்த்தி அவர்களை மதிப்பிற்குரிய அரசுச் செயலாளர் அவர்கள் பாராட்டிக் கௌரவித்தார்கள்.

'தினமலர்' நாளிதழின் 'சுவடியியல் தேசியக் கருத்தரங்கச்' சிறப்பு மலரையும், கருத்தரங்கில் பங்குபெறுவோரின் ஆய்வுக் கட்டுரைகள் அடங்கிய உருட்டச்சுத் தொகுதியையும் விழாவில் மதிப்பிற்குரிய அரசுச் செயலாளர் அவர்கள் வெளியிட, சிறப்பு மலரின் முதற்படியை நூலக நிருவாக அலுவலரும், ஆய்வுக் கட்டுரைத் தொகுதியின் முதற்படியைப் பேராசிரியர் திருமிகு பொற்கோ அவர்களும் பெற்றுக்கொண்டனர்.

'தினமலரின்' சிறப்பு மலருக்கு மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்களும் மாண்புமிகு தமிழ் ஆட்சிமொழி — பண்பாட்டுத் துறை அமைச்சர் அவர்களும் மதிப்பிற்குரிய தஞ்சை மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களும் வாழ்த்துச் செய்தி வழங்கியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

விழாத் தலைமையுரை ஆற்றிய மதிப்பிற்குரிய அரசுச் செயலாளர் அவர்கள், "பரவிக்கிடக்கும் சுவடிகளைத் திரட்டி அதில் புதைந்துள்ள நமது கலை, கலாச்சாரப் பண்பாட்டினை வெளிக்கொண்டு வரவேண்டும். இதற்காகத் தமிழக அரசு விரைவில் சுவடியியல் அறிஞர்கள் கூட்டத்தைக் கூட்ட உள்ளது," எனத் தெரிவித்ததோடு இரு நிறுவனங்களும் இணைந்து நடத்துகின்ற இந்த முயற்சிக்குப் பாராட்டுகளையும் தெரிவித்தார்கள்.

விழாவின் தொடக்கத்தில் உலகத் தமிழாராய்ச்சி நிறுவன இயக்குநர் உயர்திரு முனைவர் ச. சு. இராமர் இளங்கோ அவர்கள் வரவேற்புரை ஆற்றினார்கள். விழா நிறைவில் சரசுவதி மகால் நூலக நூலகர் மற்றும் வெளியீட்டு மேலாளர் திரு. அ. பஞ்சநாதன் அவர்கள் நன்றியுரை கூறினார்.

விழாவின்பொழுது அரங்கம் அறிஞர் பெருமக்களாலும், ஆய்வாளர்களாலும், ஆர்வலர்களாலும் நிரம்பியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

விழாவையடுத்துப் பிற்பகல் 2-00 மணிக்குக் கருத்தரங்கத்தின் முதல் சிறப்புச் சொற்பொழிவு நடைபெற்றது. கருத்தரங்கையொட்டி மூன்று நாள்களும் மூன்று அறிஞர்பெருமக்களின் சிறப்புச் சொற்பொழிவுகள் ஏற்பாடு செய்யப்பெற்றிருந்தன.

முதல் நாள் சிறப்புச் சொற்பொழிவைப் பேரா. மேஜர் அ. கிருட்டிணமூர்த்தி அவர்கள் "Tamil palmleaf manuscripts in the Libraries of

Europe" எனும் தலைப்பில் ஆங்கிலத்தில் நிகழ்த்தினார். இரண்டாம் நாள் சிறப்புச் சொற்பொழிவைப் (காலை 10-00 மணிக்கு) பெரும்புலவர் இரா. இளங்குமரனார் அவர்கள் "அச்சிட்ட நூலும் சுவடி ஆய்வும்" எனும் தலைப்பில் நிகழ்த்தினார். மூன்றாம் நாள், படக்காட்சியுடன் கூடிய சிறப்புச் சொற்பொழிவை (காலை 10-00 மணிக்கு) சென்னை மாநிலக் கல்லூரி வரலாற்றுத்துறை பேராசிரியர் முனைவர் சி. எஸ். மோகனவேலு அவர்கள் "Tamil palmleaf in Germany" எனும் தலைப்பில் நிகழ்த்தினார்.

மூன்றுநாள் கருத்தரங்கம் ஐந்து அமர்வுகளைக் கொண்டதாக அமைந்தது. 2—1—97 ஆம் நாள் பிற்பகல் 2-00 மணிக்கு முதல் அமர்வும், 3—1—97 ஆம் நாள் முற்பகல் 11-00 மணிக்கு இரண்டாம் அமர்வும், பிற்பகல் 2-00 மணிக்கு மூன்றாம் அமர்வும், 4—1—97 ஆம் நாள் முற்பகல் 11-00 மணிக்கு நான்காம் அமர்வும், பிற்பகல் 2-00 மணிக்கு ஐந்தாம் அமர்வும் தொடங்கி நடைபெற்றன.

இவ்வைந்து அமர்வுகளுக்கும் முறையே அறிஞர்பெருமக்களான திருவாளர்கள் முனைவர், புலவர் செ. இராசு, புலவர் ப. வெ. நாகராசன், முனைவர் ஆ. தசரதன், மேஜர் அ. கிருட்டினமூர்த்தி, முனைவர் சி எஸ். மோகனவேலு ஆகியோர் தலைமை வகித்தனர். ஒவ்வொரு கட்டுரையாளரும் கட்டுரை வாசித்கதும், அவையோரின் வினாக்களுக்கும் அவற்றுக்குக் கட்டுரையாளரின் பதில்களுக்கும் என நேரம் ஒதுக்கப்பெற்று, அமர்வுகள் அனைவருக்கும் பயன்படும் வகையில் அமைந்து சிறந்தன. தலைமையேற்ற அறிஞர்பெருமக்கள் அமர்வுகளை நெறிப்படுத்திப் பாங்குற நடத்தினர்.

மூன்று நாள்களிலும் நடைபெற்ற ஐந்து அமர்வுகளிலும் மொத்தம் 28 ஆய்வுக் கட்டுரைகள் வாசிக்கப்பெற்றன. அறிஞர்களும் ஆய்வாளர்களும் சுவடியியல் ஆய்வுகளை மேலும் செழுமைப்படுத்தும் வகையில் இக் கட்டுரைகளைப் படைத்திருந்தனர் கட்டுரைகள், சுவடிப் பதிப்பு வரலாறு, சித்த மருத்துவப் பதிப்புகள், நாட்டுப்புற இலக்கியப் பதிப்புகள், இசுலாமியச் சுவடிப் பதிப்புகள், சிற்ப ஓவியங்களில் சுவடிகள், மோடி ஆவணங்கள், இலக்கியப் பதிப்புகள், தமிழ்மொழி மற்றும் தமிழக வரலாற்றுத் தொடர்புடைய சம்ஸ்கிருத, தெலுங்குச் சுவடிகள் முதலான பொருண்மைகளில் படைக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

இலக்கியம், இலக்கணம், சித்த மருத்துவம் ஆகிய துறைகளைச் சார்ந்த சுவடிகள் பற்றியும், அந்தச் சுவடிகளை நூலாகப் பதிப்பிப்பதில் உள்ள சிக்கல்கள், பதிப்பிக்க வேண்டிய முறைகள் பற்றியும் இக்கட்டுரைகளில் விவாதிக்கப்பட்டிருந்தன.

சரசுவதி மகால் நூலக அலுவலர்கள், பண்டிதர்கள், மோடி வல்லுநர் மொத்தம் ஒன்பதின்மர் இக்கருத்தரங்கில் பங்கு பெற்றுக் கட்டுரைகள் வாசித்தமை குறிப்பிடத்தக்கது. அவர்களின் பட்டியல் வருமாறு. 1. திரு எள். பாலசுப்ரமணியன், நுண்படப்பிரிவுக் காப்பாளர், 2. திரு பி. பெருமாள், காப்பாளர், 3. திரு ம. சீராளன், தொழில்நுட்ப உதவியாளர் (புத்தகப் பிரிவு), 4. திருமதி ச. திலகம், தமிழ்ப்பண்டிதர், 5 திரு ய. மணிகண்டன், தமிழ்ப்பண்டிதர், 6. திருமதி எஸ். இராஜலட்சுமி, வடமொழிப்பண்டிதர், 7. திரு என். சீனிவாசன், வடமொழிப் பண்டிதர் 8. திரு இராக. விவேகானந்த கோபால், மோடி வல்லுநர் 9. திரு ந. விசுவநாதன், (முன்னாள் தெலுங்கு பண்டிதர்) I. G N. C. A.

4—1—97 பிற்பகல் 4-00 மணிக்குக் கருத்தரங்கின் ஐந்தாம் அமர்வு நிறைவுபெற்றதும் சுவடியியல் தேசியக் கருத்தரங்கின் நிறைவு விழா நிகழ்ச்சிகள் தொடங்கின.

நிறைவு விழாவிற்குத் தொல்பொருள் ஆய்வுத்துறை இயக்குநர் திருமிகு நடன. காசிநாதன் அவர்கள் தலைமை வகித்தார்கள். உலகத் தமிழாராய்ச்சி நிறுவன இயக்குநர் திருமிகு முனைவர் ச. சு. இராமர் இளங்கோ அவர்களின் வரவேற்புரையுடன் தொடங்கிய இவ்விழாவில் தலைமையுரையாற்றிய திருமிகு நடன. காசிநாதன் அவர்கள், "சுவடியியல் ஆய்வுகள் மேலும் பொலிவுபெற இக்கருத்தரங்கம் பயன்படும்" என்று குறிப்பிட்டார்.

விழாவில் சிறப்புரை ஆற்றிய சென்னை மாநிலக் கல்லூரித் தமிழ்ப் பேராசிரியர் முனைவர். திருமிகு இரா. இளவரசு அவர்கள், ஓலைச்சுவடிகளைப் பதிப்பிக்கும்போது மேற்கொள்ளவேண்டிய முறைகள் பற்றியும், உ. வே. சாமிநாதய்யரின் பதிப்புமுறை பற்றியும், அவர்தம் தமிழ்த்தொண்டு பற்றியும், ''கொங்குவேள் மாக்கதை'' எனக் குறிப்பிடப்பட்டிருந்த சுவடி, ''பெருங்கதை'' எனும் தலைப்பில் பதிப்பிக்கப்பட்டிருப்பது பற்றியும் நுட்பமாகவும் சுவையாகவும் எடுத்துரைத்தார்.

கருத்தரங்கில் வாசிக்கப்பட்ட கட்டுரைகளின் தன்மைகள் பற்றி எடுத்துரைத்தும், வாசிக்கப்பட்ட ஒவ்வொரு கட்டுரையையும் சுருக்கமாக அறிமுகம் செய்தும் உலகத் தமிழாராய்ச்சி நிறுவனச் சுவடிப் பிரிவின் ஆராய்ச்சி உதவியாளர் முனைவர், சூ. நிர்மலாதேவி அவர்களும், தஞ்சை சுரசுவதி மகால் நூலகத் தமிழ்ப்பண்டிதர் திரு ய. மணிகண்டன் அவர்களும் தொகுப்புரை ஆற்றினர். தொகுப்புரையில் அவர்கள், ''ஆழமாக உழைத்துச் சிந்தித்து ஆக்கப்பெற்ற இக்கட்டுரைகள் சுவடியியல் துறைக்குச் சிறந்த நல்வரவுகள்'' எனக் குறிப்பிட்டனர்.

நிறைவுரை ஆற்றிய தமிழ்ப் பல்கலைக்சழகத் துணைவேந்தர் மாண்பமை. முனைவர் சே. கருணாகரன் அவர்கள், "தொன்மையான வரலாற்றுச் சிறப்புடைய தஞ்சை சரசுவதி மகால் நூலகமும், சுவடியியல் பட்டயப் பயிற்சி வகுப்புகளைத் தொடர்ந்து நடத்தி வருகின்ற ஒரே நிறுவன மான உலகத் தமிழாராய்ச்சி நிறுவனமும் இணைந்து இந்தத் தேசியக் கருத்தரங்கை ஏற்பாடு செய்துள்ளது பாராட்டத்தக்கது" என்று பாராட்டிய தோடு, "வாசிக்கப்பட்ட கட்டுரைகள் அனைத்தையும் விரைவில் நூலாக வெளியிடவேண்டும்" என்றும் தமது நிறைவுரையில் குறிப்பிட்டார்கள்.

நிறைவு விழாவில், இக்கருத்தரங்கை நடத்துவதற்கு உலகத் தமிழாராய்ச்சி நிறுவனத்திற்கு நிதியுதவி நல்கிய தமிழக அரசிற்கும், சரசுவதி மகால் நூலகத்திற்கு நிதியுதவி நல்கிய நடுவண் அரசிற்கும் இரு நிறுவனச் சார்பிலும் நன்றி கூறப்பெற்றது. தொடக்க மற்றும் நிறைவு விழாவிற்குச் சென்னையில் உள்ள பல்வேறு தமிழ் அமைப்புகளின் பொறுப்பாளர்களும், தமிழறிஞர்களும், தமிழன்பர்களும், ஆய்வாளர்களும் திரளாக வருகை தந்திருந்தமையும், வானொலி, தொலைக்காட்சி, பத்திரிகைத் துறையினர் வருகை தந்திருந்தமையும் குறிப்பிடத்தக்கது.

இக் கருத்தரங்கம் பற்றியும், தொடக்க, நிறைவு விழாக்கள் பற்றியும் 'தினமணி', 'தினமலர்', 'தினகரன்', 'முரசொலி', 'THE HINDU', 'INDIAN EXPRESS' ஆகிய நாளிதழ்களிலும், வானொலி, தொலைக்காட்சியிலும் விரிவான செய்திகள் வெளிவந்தமை இத் தேசியக் கருத்தரங்கின் வெற்றியை—சிறப்பை முரசறைவதாக அமைந்தது.

தஞ்சை சரசுவதி மகால் நூலக இயக்குநர் அவர்களின் அனுமதியோடும் நிருவாக அலுவலர் அவர்களின் ஆலோசனையோடும் நான்குமுறை சென்னை சென்று, கருத்தரங்க ஏற்பாட்டுப் பணிக் குழுவில் இடம்பெற்று, இந்நூலக நூலகர் மற்றும் வெளியீட்டு மேலாளர் திரு அ. பஞ்சநாதன் அவர்களும் இந் நூலகத் தமிழ்ப் பண்டிதர் திரு ய. மணிகண்டன் அவர்களும் திறம்படப் பணி புரிந்ததும், நூலக நிருவாக அலுவலர் அவர்களும், வெளியீட்டு மேலாளரும், தமிழ்ப் பண்டிதரும் 'தினமலர்' நாளிதழின் சிறப்பு மலர்க்குழுவில் இடம்பெற்று மலரைச் சிறப்புற வெளிக்கொணர்ந்தமையும், இரு நிறுவனமும் இணைந்து கருத்தரங்கை நடத்தவேண்டும் என வேண்டுகோள் மடல் விடுத்த நாள் முதல்,

நிறைவு விழா நிறைவுபெறும்வரை மதிப்பிற்குரிய உலகத் தமிழாராய்ச்சி நிறுவன இயக்குநர் அவர்கள் காட்டிய ஆர்வமும் அயராச் செயல்வேகமும், வேண்டுகோளை ஏற்று இணைந்து நடத்த இசைவு தெரிவித்ததோடு, கருத்தரங்க ஏற்பாடுகளின் ஒவ்வொரு நிலையிலும் தக்க ஆணைகளைத் தமக்கிருக்கும் பல்வேறு பணிகளுக்கிடையிலும் உடனுக்குடன் பிறப்பித்து ஆர்வமும் அக்கறையும் காட்டிக் கருத்தரங்கம் சிறக்க வழிகாட்டுதல்களை நல்கிய நமது பெருமதிப்பிற்குரிய தஞ்சை மாவட்ட ஆட்சித்தலைவர் மற்றும் இயக்குநர் அவர்களின் ஈடுபாடும் இச் ‘சுவடியியல் தேசியக் கருத்தரங்கை’ ஏற்றமுற நடத்தி முடிப்பதற்குத் துணை புரிந்தன எனல் மிகையிலா உண்மையாகும்.

உலகத் தமிழாராய்ச்சி நிறுவனச் சுவடிப் பிரிவுப் பொறுப்பாளர் முனைவர் தி. மகாலட்சுமி அவர்கள் நன்றிகூற நிறைவு விழா இனிது நிறைவு பெற்றது.

பருவ இதழ்ப் படைப்புகள் – சுருக்க அறிமுகம்

அ. பஞ்சநாதன், எம். ஏ., எம். எல். ஐ. எஸ்.,
வெளியீட்டு மேலாளர் மற்றும் நூலகர்,
சரசுவதி மகால் நூலகம்.

சுவடியியல் தேசியக் கருத்தரங்கம்

தஞ்சை சரசுவதி மகால் நூலகமும் சென்னை உலகத் தமிழாராய்ச்சி நிறுவனமும் இணைந்து சென்னை உலகத் தமிழாராய்ச்சி நிறுவன வளாகத்தில் நடத்திய மூன்றுநாள் சுவடியியல் தேசியக் கருத்தரங்க நிகழ்வு களை இக்கட்டுரை விவரிக்கின்றது. இக்கட்டுரையை இந்நூலக நிருவாக அலுவலர் திருமிகு எம். உத்திராபதி அவர்கள் எழுதியுள்ளார்கள்.

உலாப்பதிப்பில் ஒரு சொல்

சுவடிப்பதிப்பியல் குறித்த ஆய்வுக் கட்டுரையாக இது மலர்ந்துள்ளது.

'மேய்தல்' எனும் சொல் செம்மையான இலக்கியச்சொல் அன்று எனுங் கருத்து தமிழ் நூல்களைப் பதிப்பித்த சிலரிடையே நிலவியதால், ஏட்டுச் சுவடிகளிலும், கல்வெட்டுகளிலும் 'மேய்தல்' என்ற சொல் வந்த இடங்களை அவர்கள் 'வேய்தல்' எனத் திருத்திப் பதிப்பித்துள்ளனர். அவ்வாறு பதிப் பிக்கப்பட்டுள்ளமை ஏற்புடையதா என இக்கட்டுரை ஆராய்கின்றது.

இவ்வாய்வுக் கட்டுரையை, இந்நூலக நுண்படத்துறைக் காப்பாளர் திரு எம். பாலசுப்ரமணியன் அவர்கள் எழுதியுள்ளார்.

A Note on Atlases and Maps collections in the Sarasvati Mahal Library, Thanjavur.

சரசுவதி மகால் நூலகத்தில் உள்ள நிலப்படத்தொகுப்பு மற்றும் வரை படங்கள் குறித்த கட்டுரையாக இது மலர்ந்துள்ளது.

அரிய சுவடிகளுக்கும் பழைய அச்சு நூல்களுக்கும் புகழ்பெற்ற இந் நூலகத்தில் பழைய நிலப்படங்களும், வரைபடங்களும் உள்ளன என்பதைக்

கூறுவதே இவ்வாங்கிலக் கட்டுரையாகும். கி. பி. 1692இல் அச்சான நூலும் கி. பி. 1788இல் வெளியான 'இந்துஸ்தான் நிலப்படமும்' குறிப்பிடத்தக்கவை. இந்நிலப்படத்தில் இந்தியாவையும் இலங்கையையும் இணைக்கும் தரைப் பாலம் காட்டப்பட்டிருப்பது சிறப்பாகும். ஆய்வாளர்களுக்குப் பல அரிய செய்திகளைத் தரும் இக்கட்டுரையினை நூலகத்தின் பாதுகாப்பாளர் (கன்சர்வேட்டர்) திரு ப. பெருமாள் அவர்கள் எழுதியுள்ளார்.

இராமாயணப் பதிப்புகள் — ஒரு பார்வை

இந்நூலகத்தின் புத்தகப் பிரிவில் இடம்பெற்றுள்ள, இராமாயணக் கதையை எடுத்துரைக்கும் பல மொழி நூல்களைப் பற்றிய விவரங்களை இக் கட்டுரை தருகின்றது. நூல்களின் பட்டியல் எண்களோடு. கட்டுரையின் இறுதிப் பகுதியில் அமைந்துள்ளது.

இக்கட்டுரையினை இந்நூலகத்தின் நூலகர் நிலை II திருமதி. கே. இராமதிலகம் அவர்கள் எழுதியுள்ளார்.

சப்தரிஷி நாடி (நூல் விளக்கம்)

இந்நூலகத்தின் புத்தகப்பிரிவில் இடம்பெற்றுள்ள 'சப்தரிஷி நாடி' என்னும் அரிய சோதிட நூலின் ஆறு தொகுதிகளைப் பற்றிய விவரங்களையும், அவற்றின் சிறப்புகளையும் இக்கட்டுரை எடுத்துரைக்கின்றது.

இக்கட்டுரையினை இந்நூலகத்தின் முன்னாள் நூலகர் நிலை II, இந்நாள் புத்தகப்பிரிவின் தொழில்நுட்ப உதவியாளர் திரு. எம். சீராளன் அவர்கள் எழுதியுள்ளார்.

சுந்தரர் சரித்திரச் சுருக்க அகவல்

சுந்தரமூர்த்தி நாயனாரின் திருச்சரிதத்தை அகவற்பாவில் எடுத்துரைக் கும் இப்படைப்பு, நூலகத் தமிழ்த்துறையின் 1201 ஆம் எண் ஓலைச்சுவடியில் இடம்பெற்றுள்ளதாகும். கள்ளப்புலியூர் பர்வத சஞ்சீவி அய்யர் எனும் புலவர் மணியால் புனையப்பெற்ற இவ்வகவலுக்கு ஒரே சுவடியில் இரு பிரதிகள் அமைந்துள்ளன. இரண்டுக்கும் இடையே பாடவேறுபாடுகள் மிகுதியாகக் காணப்படுவதால், அவ்விரு பிரதிகளுமே இங்கு ஒரு சேரப் பதிப்பிக்கப் பட்டுள்ளன.

இத் தமிழ்ச்சுவடியை, இந்நூல்கத் தமிழ்ப்பண்டிதர் திருமதி ச. திலகம் அவர்கள் பதிப்பித்துள்ளார்.

மூதுரை (ஒப்புமைப் பாடல்களுடன் கூடிய பதிப்பு)

ஔவையார் இயற்றிய 'மூதுரை' எனும் நீதிநூல், இந்நூலகத் தமிழ்த் துறைச் சுவடிகளையும், அச்சுநூல்களையும் ஒப்புநோக்கிப் பெற்ற பாடவேறு பாடுகளுடனும்,

தமிழ், வடமொழி நீதிநூல்களை ஒப்புநோக்கிப் பெற்ற ஒப்புமைப் பாக்களுடனும், சொல்லடைவோடும் இங்குப் பதிப்பிக்கப்பட்டுள்ளது.

இப்பதிப்பினை, இந்நூலகத் தமிழ்ப்பண்டிதர் திரு. ய. மணிகண்டன் அவர்கள் உருவாக்கியுள்ளார்.

இரண்டாம் ஏகோஜியார் பிரபஞ்சாமிருத சாரமும்

இந்நூலக வடமொழித் துறையில் இடம்பெற்றுள்ள 'ப்ரபஞ்சாம்ருதஸார ராஜரஞ்ஜன புராணம்' எனும் சுவடி, சுமார் எழுபது சிறுதலைப்புகளைக் கொண்டதாகவும், ஒவ்வொன்றும் தனித்தனி விஷயங்களை எடுத்தியம்புவ தாகவும் அமைந்துள்ளது.

இதில் 'ராஜகிய வ்ருத்தாந்த கதா' என்ற தலைப்புடைய ஓர் அத்தியாயம் இங்குத் தமிழ்க் கருத்துரையுடன் பதிப்பிக்கப்பட்டுள்ளது. இதற்கு முன்னரும் பருவ இதழில் இச்சுவடியின் சில பகுதிகள் பதிப்பிக்கப்பட்டுள்ளன.

இவ்வத்தியாயம், நாரதமுனி அரசபரிபாலனம் எவ்வாறு செய்யவேண்டு மென்று வேண்ட, ஸ்ரீ கிருஷ்ணர், 'அரசன் எவ்வாறு இருக்கவேண்டும் எவ்வாறு அரசாட்சி செய்தால் ஆட்சி தொடரும்' என எடுத்துரைப்பதாக அமைந்துள்ளது.

இப்படைப்பை இரண்டாம் ஏகோஜியின் அவைப்புலவரான திரு மகாதேவ கவி இயற்றி மன்னர் பெயரில் படைத்துள்ளார்

இந்நூலக வடமொழிப் பண்டிதர் திருமதி எஸ். இராஜலக்ஷ்மி அவர்கள் இதனைப் பதிப்பித்துள்ளார்.

ஸ்ரீ நாராயணதீர்த்தரின் படைப்புகள்

'ஸ்ரீசிவநாராயண தீர்த்தர்' என்பவரின் படைப்புகளான 'சாண்டில்ய பக்தி மீமாம்ஸா பாஷ்யம்', 'பாரிஜாதாபஹரணம்' என்ற இரண்டும், சுவடிகளி லிருந்து இங்குப் பதிப்பிக்கப்பட்டுள்ளன.

சம்ஸ்கிருத, தெலுங்கு மொழிகளில் அமைந்த இவை தேவநாகரி வடிவில் இங்குப் பதிப்பிக்கப்பட்டுள்ளன. இரண்டும் நிறைவற்ற சுவடிகளாக உள்ள போதிலும், இவற்றின் மொழிவளம், கற்பனைவளம் ஆகியவற்றைக் கருத்தில் கொண்டு இங்குப் பதிப்பித்து வெளியிடப்படுகின்றன.

இசை, நாட்டியத் துறையினர்க்குப் பயன்படும் இவற்றை, இந்நூலக முன்னாள் தெலுங்குப் பண்டிதர் திரு ந. விசுவநாதன் அவர்களும். இந்நூலக சம்ஸ்கிருதப் பண்டிதர் திரு என். சீனிவாசன் அவர்களும் இணைந்து பதிப்பித் துள்ளனர்.

ஸ்வயம்வரா விதானம்

இந்நூலக வடமொழிப் பிரிவில் 6700 எனும் எண்ணில் "ஸ்யம்வரா விதானம்" என்ற தலைப்பில் சிறு சுவடி நூல் இடம்பெற்றுள்ளது இக்குறுஞ் சுவடி ஸ்ரீ பராசக்தியின் அம்சமான "ஸ்ரீ ஸ்வயம்வரா" என்ற தேவியை வழி படும் முறையைத் தெளிவாக எடுத்துரைக்கின்றது. இத்தேவியைப் பூஜை செய்வதால் மணமாகாத பெண்களுக்கு மணவாழ்க்கை அமையும் என்பது பல னாகச் சொல்லப்பெற்றுள்ளது.

இந்நூலை அனைவரும் படித்துப் பயன்பெறும் பொருட்டுத் தமிழ் வரி வடிவத்துடனும், தக்க தமிழ் விளக்கத்துடனும் இந்நூலக மேனிலை வடமொழிப் பண்டிதர் தேதியூர் திரு. எஸ். கிருஷ்ணமூர்த்தி சாஸ்திரிகள் அவர்கள் பதிப்பித்துள்ளார்கள்.

நக்ஷத்திர மாலிகா

இருபத்தேழு நட்சத்திரங்களையும் ஒவ்வொரு ஸ்லோகத்திலும் பொருந்து மாறு அமைத்து இராமாயணக் கதையைக் கருப்பொருளாகக் கொண்டு எழுதப் பெற்ற காகிதச் சுவடியொன்று "நக்ஷத்ர மாலிகா" என்னும் தலைப்பில் இந் நூலக வடமொழிப் பிரிவில் இடம்பெற்றுள்ளது.

இது ஒரு நிறைவற்ற குறுஞ்சுவடியாக இருப்பினும், இதன் ஸ்லோகங் களின் சந்தமும், மொழியும் படிப்போர் மனத்தைக் கவர்வனவாக அமைந்துள்ள மையால் இங்குப் பதிப்பிக்கப்பட்டுள்ளது.

இந்நூலைத் தமிழ் மொழிபெயர்ப்புடன், இந்நூலக வடமொழிப் பண்டிதர் திரு. ஆ. வீரராகவன் அவர்கள் பதிப்பித்துள்ளார்.

நவமூர்த்தி ப்ரதிஷ்டாவிதி

திருமால் வழிபாட்டுமுறை ஸ்ரீ வைகானஸம், ஸ்ரீ பாஞ்சராத்ரம் என்ற இருபெரும் பிரிவைக் கொண்டதாகும். ஸ்ரீ வைகானஸ ஆகம முறைப்படி கோயில்களில் மூர்த்தங்களை ப்ரதிஷ்டை செய்யும் முறையைத் தெளிவாக எடுத்துக் கூறுவதாக இக்கட்டுரை அமைந்துள்ளது.

இக்கட்டுரையில் ப்ரதிஷ்டை செய்வதற்கு முன்பு செய்யவேண்டிய செயல்களைச் செய்யும் ஆசார்யனுக்குத் தேவையான தகுதிகள், ஒவ்வொரு (ஒன்பது) மூர்த்தங்களுக்கும் சொல்லப்பட்டுள்ள அக்னியின் பெயர்கள், செய்யவேண்டிய ஹோமங்கள் முதலியன பற்றிய விளக்கங்கள் சொல்லப்பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது.

இக்கட்டுரையைத் தமிழில் இந்நூலக வடமொழிப் பண்டிதர் திரு. எஸ். சுதர்சனன் அவர்கள் எழுதியுள்ளார்.

Srotriam Lands to Sri Venugopalaswamy Temple
(கொள்ளிடக்கரையில் உள்ள ஸ்ரீ வேணுகோபாலசுவாமிக்கு சுரோத்திரிய நிலம்)

சுரோத்திரியம் என்பது வேதமறிந்த பிராமணருக்குக் கொடுக்கப்படும் நிலமாகும். கொள்ளிடக்கரையில் அமைந்த ஸ்ரீவேணுகோபாலசுவாமி கோயிலுக்குப் பூசை செய்யும் பிராமணர்களின் பெயரால் மராட்டிய மன்னர் இரண்டாம் துளஜாவால் சுரோத்திரியநிலம் அளிக்கப்பட்டது. இந்நில வருவாய் துளஜேந்திரபுரம் அக்கிரகாரத்துப் பிராமணர்களுக்கும், ஆங்கிருந்த சத்திரம் சாவடி முதலியவற்றில் வந்து தங்கும் பிரயாணிகளுக்கு உணவளிக்கவும் ஸ்ரீவேணுகோபாலசுவாமிக்குப் பூசை செய்யவும் பயன்படுத்தப்பட்டது என்ற செய்தியைக் கொண்டிலங்கும் மோடி ஆவணம் இந்நூலக மோடி ஆவணத்துறையில் உள்ளது.

இந்த மோடி ஆவணத்தில் கூறப்பட்டுள்ள செய்திகளை ஆங்கிலத்தில் விவரிக்கும் இக்கட்டுரை, மோடி ஆவணத்தின் தேவநாகரி வரிவடிவத்தையும் தாங்கியமைந்துள்ளது.

நாகரி வரிவடிவ ஆக்கத்துடன், இவ்வாங்கிலக் கட்டுரையை, இந்நூலக மோடி வல்லுநர் திரு. இராக. விவேகானந்தகோபால் அவர்கள் எழுதியுள்ளார்.

வேண்டுகோள்

கருணையுள்ளங்கொண்ட நம் முன்னோர்கள், அரிய பெரிய இலக்கியங்களையும், பிறவற்றையும், பனையோலைகளில் எழுதிச் சுவடிகளாக நமக்குத் தந்தனர். அவை, பல்வேறு இடங்களில் முடங்கி உள்ளன. சுவடிகள் பழுதடைவதற்குமுன் சரசுவதி மகாலுக்கு அன்பளிப்பாகக் கொடுத்துதவினால், அவை மக்களுக்குப் பயன்படும்.

மகாலுக்குக் கொடுப்பதன் மூலம், சுவடி தந்தவர்களும், சுவடி எழுதியோரும் அழியாப் புகழை, பெருமைசால் சரசுவதி மகால் உள்ளளவும் பெறுவர். அவை பதிப்பாகி வருமாயின் சுவடி தந்தார் பெயர் இடம் பெறுவதோடு, அப்பதிப்பில் ஐந்து பிரதிகளும் பெறுவர்.

எனவே, "நாம் பெற்ற பேறு பெறுக இவ்வையகம்" என்ற எண்ணமுடைய நற்பண்பாளர்கள் தம்மிடமுள்ள சுவடிகளைச் சரசுவதி மகாலுக்குத் தந்துதவ வேண்டுகிறேன்.

தஞ்சாவூர்,
28—2—97.

மாவட்ட ஆட்சியர் மற்றும் இயக்குநர்,
சரசுவதி மகால் நூலகம்.

உலாப்பதிப்பில் ஒரு சொல்

சூடவாயில் பாலசுப்ரமணியன்,
காப்பாளர்—நுண்படப்பிரிவு,
சரசுவதி மகால் நூலகம்.

தமிழ் இலக்கியப் பதிப்புகளான அச்சுநூல்களில் "வேய்தல்" என்ற சொல் சங்க நூல்களிலிருந்து பிற்கால நூல்கள் வரை காணப்பெறும் ஒன்றாகும். சென்னைப் பல்கலைக்கழகத் தமிழகராதி (Tamil Lexicon) வேய்தல் என்ற சொல்லுக்கு மூடுதல், சூடுதல், பதித்தல், பொருத்துதல், துளைபோடுதல், மலர்தல் என்று பல்வேறு பொருள்களைக் குறிக்கின்றது. "நாடெலாம் பின்னும் பிறங்கழல் வேய்ந்தன பெய்கழற்கால் மன்னன்கலமறம்" —எனும், புறப்பொருள் வெண்பாமாலைப் பாடலை மேற்கோள் காட்டி இங்கு வேய்ந்தன என்பது சூழ்தல் என்ற பொருளில் ஆளப்பெற்றிருப்பதையும் உணர்த்துகின்றது. இதுபோன்று "புதன்மானப் பூவேய்ந்து" எனும் மதுரைக்காஞ்சியின் அடியையும், "நுமர் வேய்ந்த கண்ணியோடு" எனும் கலித்தொகை அடியையும் எடுத்துக் காட்டிப் "பூச்சூடுதல்" என்ற பொருள் இருப்பதையும் சுட்டுகின்றது. "மாலையை வேய்ந்தரிக்கு மிஞிறு" எனும் சீவகசிந்தாமணி அடியால் "சூழ்தல்" என்ற பொருளில் கையாளப்பெற்றிருப்பதையும், வேய்ந்த மாமணிக் கவசமும் எனும் சொற்றொடரால் "பதித்தல்" என்ற பொருள் வழங்கியமையும், "கார்மலர் வேய்ந்த" என்ற கலித்தொகைத் தொடரால் "பொருந்துதல்" என்ற பொருளுணர்த்துவதையும், துளை போடுதல் என்ற பொருளில் அகநானூறும், மலர்தல் என்ற பொருளில் கல்லாடமும் பேசும் பாங்கையும் எடுத்துக் காட்டுகின்றது.

வீடு அல்லது கட்டடம் ஒன்றின் கூரையைக் கீற்று அல்லது வேறு பொருள் கொண்டு மூடுவதை "வேய்தல்" என்ற சொல் கொண்டு எழுதுகின்றோம்; அச்சு நூல்களிலும் பதிப்பிக்கின்றோம். இதுவே பதிப்பிற்குரிய செம்மையான சொல் என்றும் கருதுகின்றோம். ஆனால், குமரியிலிருந்து தலைநகரம் வரை உள்ள தமிழகம் முழுவதும் பல்வேறு வட்டாரப் பேச்சு வழக்குகள் இருப்பினும் "கூரை மேய்தல்" என்ற சொல்லாட்சியே பாமரர் பேச்சு வழக்கில் மாறுபடாமல் உள்ளது. "மேய்தல்" என்ற இச்சொல் செம்மையான இலக்கியச் சொல் அல்ல என்ற ஒரு கருத்து தமிழ் நூல்கள் பதிப்பித்தவர்களிடையே

ஏற்பட்டதால் ஏட்டுச்சுவடிகளிலும், கல்வெட்டுக்களிலும் "மேய்தல்" என்ற சொல் வந்த இடங்களை எல்லாம் "வேய்தல்" எனத் திருத்திப் பதிப்பித்தனர். இது ஏற்புடையதா என்பதனை ஆராய்வதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

கவிச்சக்கரவர்த்தி ஒட்டக்கூத்தர் எழுதிய மூவருலாவின் ஒரு பகுதியான விக்கிரம சோழன் உலாவில், சோழமன்னர் மரபு கூறுமிடத்துக் காணப்படும் ஒரு கண்ணி, இதுவரை வெளிவந்த அச்சு நூல்களில்,

"கோதிலாத் தேறல் குனிக்குந் திருமன்றம்
காதலாற் **பொன்வேய்ந்த** காவலனும்"

என்றே பதிப்பிக்கப்பெற்று வெளிவந்துள்ளது. பொன்வேய்ந்த என்ற சொல்லாட்சிதான் ஏட்டுச்சுவடிகளில் உள்ளதா என ஆராய்ந்த போது இதுவரை நான் கண்ட அனைத்துச் சுவடிகளிலும் "பொன் மேய்ந்த" என்ற சொல்லாட்சிதான் உள்ளதைக் காண முடிந்தது.



ஒட்டக்கூத்தரின் விக்கிரம சோழனுலா ஓலைச்சுவடியின் ஒரு பகுதி
வரி எண் 4 "பொன் மேய்ந்த காவலனும்" என்றுள்ளது.
(சரஸ்வதி மகால் தமிழ்த்துறைச் சுவடி)

1926ஆம் ஆண்டு பதிப்பிக்கப்பெற்ற திரு. அ. கோபாலய்யரின் மூவருலாப்பதிப்பில்[1] "பொன் வேய்ந்த காவலனும்" என்று திருத்தம் செய்து பதிப்பித்திருந்தும், அடிக்குறிப்பில் "பொன் மேய்ந்த" என்ற பிரதிபேதக் குறிப்பையும் தந்துள்ளார். விக்கிரம சோழன் உலாக்கூறும் "மேய்ந்த" என்ற சொல்லாட்சி பண்டைய தமிழ் நூல்களிலும், கல்வெட்டு ஆவணங்களிலும் எவ்வாறு இடம்பெற்றிருந்தது என்பதை இனிக் காண்போம்.

கி. பி. 7ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த அப்பர் பெருமானார்[2] திருக்கொண்டீச்சரத்துப் பதிகத்தில்

"கால்கொடுத்து எலும்பு முட்டிக் கதிர்நரம்பு ஆக்கை ஆர்த்துக்
தோல்உடுத்து உதிரம் அட்டி தொகுமயிர் **மேய்ந்த கூரை**
ஓல்எடுத்து உழைஞர் கூடி ஒளிப்பதற்கு அஞ்சு கின்றேன்
சேல்உடைப் பழனம் சூழ்ந்த திருக்கொண்டீச் சரத்து ளானே"

என்றும், திருமறைக்காட்டுப் பதிகத்தில்

"கால்கொடுத்து இருகை ஏற்றிக் கழிநிரைத்து **இறைச்சி மேய்ந்து**
தோல்மடுத்து உதிர நீரால் சுவர்எடுத்து இரண்டு வாசல்
ஏல்வு உடைத்தா அமைத்து, அங்கு ஏழுசாலேகம் பண்ணி
மால்கொடுத்து ஆவி வைத்தார்—மாமறைக் காட னாரே.

என்றும் கூறும் பாங்கால் கூரை மேய்தல் என்ற சொல்லாட்சிதான் திருநாவுக்கரசு பெருமானாரால் எழுதப்பெற்றது என்பதறிகிறோம். இதே சொல்லாட்சிதான் பின்னாளிலும் தொடர்ந்துள்ளது. அண்மையில் தஞ்சைப் பெரியகோயிலில் டாக்டர் இரா. நாகசாமி அவர்களோடு புதிதாகக்கண்ட மாமன்னன் இராஜராஜனின் கல்வெட்டொன்றில்

"ராஜீஸ்வர முடையார்
ஸ்ரீவிமாநம் பொன்
மேய்வித்தா..........
........ராஜராஜ........."

என்ற வரிகள் காணப்பெறுகின்றன. இது கி. பி. 11ஆம் நூற்றாண்டுப் பொறிப்பாகும்.



தஞ்சைப் பெரியகோவில் இராஜகோபுரக் கல்வெட்டு

திருவாரூர் வீதிவிடங்கப் பெருமான் கோயிலைக் கற்றளியாகப் புதுக்கிய அணுக்கியார் பரவை நங்கையார், அக்கற்றளியைப் பொற்றகடுகளால் போர்த்தி அழகு செய்தார் என்பதைக் கூறும் இராஜேந்திரசோழனின் கல்வெட்டு[3]

"கோப்பரகேசரி வன்மரான
உடையார் ஸ்ரீராஜேந்திர சோழதேவர்க்கு யாண்டு
இருபதாவது உடையார் ஸ்ரீ ராஜேந்திர சோழ தேவர் அணுக்கியார்
பரவை நங்கையார் க்ஷத்திரிய சிகாமணி வளநாட்டு
திருவாரூர் கூற்றத்து திருவாரூர் உடையார்
வீதி விடங்கதேவர் திருக்கற்றளி எடுப்பித்து
உடையார் வீதிவிடங்க தேவர்
அணுக்கியார் பரவை நங்கையார் யாண்டு
யஅ(18)-வது நாள் ௩அ(38) முதல்
நாள் யகூகூ(199) வரை உடையார்
வீதி விடங்க தேவர் கோயிலில் குடத்திலும்
பத்மத்திலும் கம்பிலும் சிகரத்திலும் வாய்
மடையிலும் நாலு நாசியிலும் உள் குட்டத்தி
—லும் ஆக பந்தயம் கழஞ்சோடு ஆயிரத்து
நானூற்று ஒன்றினாலும் முக்கழஞ்சோடு
ஆயிரத்து நானூற்று முப்பத்தெட்டினாலும்
இரு கழஞ்சோடு இரண்டாயிரத்து ஒரு
நூற்று ஒரு பத்தெட்டினாலும் தகடு
நூற்றம்பத்தெட்டினாலும் சீரிணி நூற்
றொருபத்தினாலும் குடிலைக் கல்லால்
மேய்ந்த பொன் இருபதினாயிரத்து அறுநூற்று
நாற்பத்து முக்கழஞ்சே ஏழு மஞ்சாடியும்
வீதி விடங்க தேவர் கோயிலும் இக்
கோயில் முன்பில் மண்டபத்து சூழ்ந்த
கொடுங்கையிலும் சோபான கூடத்திலும்
கதவிலும் மேய்ந்த பொன் நிறை நாற்பத்து
ஈராயிரத்து .... அருமொழி கூத்தனான"

என்று கூறுகின்றது. இது கி. பி. 1032இல் எழுதப்பெற்ற சாசனமாகும். இதில் "மேய்ந்த பொன்" என்ற சொல்லாட்சியே கையாளப்பெற்றிருப்பது குறிக்கத்தக்கதாகும்.

கி. பி. 1070—1125 வரை ஆட்சி புரிந்த முதற் குலோத்துங்கனின் தானைத் தலைவனாய்த் திகழ்ந்தவன் நரலோகவீரன் எனும் காளிங்கராயன் என்பவனாவான். இவனுடைய தில்லைக் கல்வெட்டுப் பாடல்கள்,

1 எல்லை கடலால் இகல்வேந்த ரைக்கவர்ந்த
செல்வமெலாந் தில்லைச்சிற் றம்பலத்துத்—தொல்லைத்
திருக்கொடுங்கை **பொன்மேய்ந்தான்** திண்மைக் கலியின்
தருக்கொடுங்க வெல்கூத்தன் றான்.

2 தில்லையிற்பொன் னம்பலத்தைச் செம்பொனால் **மேய்ந்து**வா
னெல்லையைப்பொன் னாக்கினான் என்பரால்—ஒல்லை
வடவேந்தர் செல்வமெலாம் வாங்கவேல் வாங்கும்
குடைவேந்தன் தொண்டையார் கொல்.

3 தென்வேந்தன் கூனிமிர்த்த செந்தமிழர் தென்கோயில்
பொன்மேய்ந்து திக்கைப் புகழ்**வேய்ந்தான்**—ஒன்னார்க்குக்
குற்றம் பலகண்டோன் கோளிழைக்கும் வேல்கூத்தன்
சிற்றம் பலத்திலே சென்று.

4 பொன்னம் பலக்கூத்த ராடம் பலமணவிற்
பொன்னம் பலக்கூத்தர் **பொன்மேய்ந்தார்**—தென்னர்
மலைமன்னர் ஏனை வட மன்னர் மற்றக்
குலமன்னர் செல்வமெலாம் கொண்டு.

5 தில்லைச்சிற் றம்பலத்தே பேரம் பலந்தன்னை
மல்லற் கடற்றானை வாட்கூத்தன்—வில்லவர்கோன்
அம்புசேர் வெஞ்சிலையின் ஆற்றல்தனை மாற்றியகோன்
செம்புமேய் வித்தான் தெரிந்து.

என்று கூறுகின்றன. அனைத்துப் பாடல்களும் மேய்ந்தான், மேய்ந்து, மேய்ந்தார், மேய்வித்தான் என்ற சொல்லாட்சியையே பெற்றுத்திகழ்கின்றன. மூன்றாம் பாடலில் உள்ள "பொன் மேய்ந்து திக்கைப் புகழ் வேய்ந்தான்" என்ற அடியால் மேய்ந்து, வேய்ந்து ஆகிய இரு சொற்களும் வெண்பாவின் ஒரே அடியில் கையாளப் பெற்று இருப்பதை நாம் காணமுடிகின்றது.

கி. பி. 1118—1136 வரை ஆட்சிபுரிந்தவன் விக்கிரமசோழனாவான். இவனைப் புகழ்ந்து ஒட்டக்கூத்தர் உலா பாடியுள்ளார். இம்மன்னவனின் புகழைப் பல நூறு கல்வெட்டுக்கள் மெய்கீர்த்தியாகக் கூறுகின்றன. விக்கிரம சோழனின் மெய்க்கீர்த்திப் பாடல்களில்

"பசும் பொன் மேய்ந்த பலிவளர் பீடமும்"

"அம்பல நிறைந்த அற்புதக் கூத்தர்
இம்பர் வாழ எழுந்தருள்வதற்குத்
திருத்தேர் கோயில் செய் பொன் மேய்ந்து"

என்றே காணப்பெறுகின்றன.

"பூமாலை மிடைந்து பொன்மாலை திகழ" எனத் தொடங்கும் இம் மெய்க்கீர்த்திப் பாடல் உள்ள கல்வெட்டுக்கள் அனைத்துமே (தமிழகம் முழுவதும் உள்ளன) "செம்பொன் மேய்ந்து" என்றுதான் கூறுகின்றன. சோழர் காலத்தில் வாழ்ந்த திரிபுவன கவிச்சக்கரவர்த்தி என்ற தலைவன் ஒருவன் இறைவனுடைய தேருக்குப் பொற்றகடுகள் போர்த்தி அழகு செய்தான் என்ற காரணத்தால் தனது பெயருக்கு முன்பு **"திருத்தேர் பொன் மேய்ந்த பெருமான்"** என்ற சிறப்புப் பெயரையும் சூடினான் என்பதைச் சில சாசனங்கள் சுட்டுகின்றன[4]. மேலும் இவனை உடையார் கவிராஜ சகலவித்யா சக்ரவர்த்தி எனும் திரிபுவன கவிச்சக்கரவர்த்தி என்றும் கூறுகின்றன. கவிக்கோ ஒருவரின் சொல்லாட்சியாகப் "பொன் மேய்ந்தான்" என்றிருப்பது குறிப்பிடத்தக்கதாகும்.

காடவர்கோன் கோப்பெருஞ்சிங்கனின் தில்லைக் கல்வெட்டொன்றில் **"பொன் மேய்ந்த சோழச்சருப்பேதி மங்கலம்"** என்ற குறிப்பு காணப்பெறுகின்றது[5]. கி. பி. 1250 முதல் 1284 வரை தமிழ்கம் முழுவதையும் தன் ஆட்சியின் கீழ்க்கொணர்ந்த சடாவர்மன் சுந்தரபாண்டியனின் புகழைப் பாடும் திருவரங்கத்துக் கல்வெட்டு[6],

"......கோயில் ஸ்ரீரங்க விமானம் முதலான
சகல விமானங்களும் சுந்தரபாண்டியன் திருமதிலும்
கோபுரமும் பொன் மேய்வித்து நமக்கு பூண

ஒருபடியாக ஆபரணங்களும் ஏற சிவிகையும்
பல பொற் பணிகளும் செய்கையாலே......''

என்று கூறுகின்றது. மேலும் இம்மன்னன் புகழ் பாடும் கல்வெட்டுப் பாடலொன்று[7] காஞ்சிக்கருகிலுள்ள திருப்புட்குழி எனும் ஊரில் உள்ளது. அதில்,

''வாழ்க கோயில் **பொன் மேய்ந்த மகிபதி**''
வாழ்க செந்தமிழ் மாலை தெரிந்தவன், வாழ்க
மண்டலம் யாவையுங் கொண்டவன் வாழ்க
சுந்தர மன்னவன் தென்னனே ......''

என்று குறிக்கப்பெற்றுக் காணப்பெறுகின்றது. தமிழகம் முழுதுமுள்ள சுந்தர பாண்டியனின் கல்வெட்டுக்கள் இவனைக் **''கோவில் பொன் மேய்ந்த பெருமான்''** என்றும் **''பொன் மேய்ந்த மகிபதி''** என்றும் மீண்டும் மீண்டும் குறிக்கின்றன. பாண்டியர் காலத்திலும் '' மேய்ந்தான் '' என்ற சொல்லே செம்மையான இலக்கியச் சொல்லாக இருந்தது என்பதனை இச்சான்றுகளால் அறியமுடிகின்றது.

இதுகாறும் கண்ட ஓலைச்சுவடிகள், கல்வெட்டுச் சாசனங்கள் ஆகியவற்றைத் தொகுத்து நோக்கும்போது திருநாவுக்கரசரின் தேவாரம், இராஜராஜ சோழன், இராஜேந்திர சோழன், விக்கிரமசோழன், மணவிற்கூத்தன் காளிங்கராயன், கோப்பெருஞ்சிங்கன், சுந்தர பாண்டியன் ஆகியோர் கல்வெட்டுக்கள், ஒட்டக்கூத்தரின் விக்கிரமசோழனுலா ஆகியவற்றில் '' மேய்தல் '' என்ற சொல் லாட்சிதான் கையாளப்பெற்றுள்ளது என்பதறிகிறோம். எனவே விக்கிரம சோழனுலாவைப் பதிப்பித்த பதிப்பாசிரியர்கள் தங்கள் பதிப்புகளில் மேய்ந்து என்னும் சொல்லை ''வேய்ந்து எனத் திருத்தியுள்ளது தேவைதானா என்பதைத் தமிழறிஞர்கள் சிந்திக்க வேண்டும்.

அகநானூறு, புறநானூறு, குறுந்தொகை, மலைபடுகடாம், மதுரைக் காஞ்சி ஆகிய சங்க நூல்களின் அச்சுப் பதிப்புகளில் '' புல்வேய்குரம்பை '' என்ற குறிப்பு காணப்பெறுகின்றது.

தமிழகம் முழுவதும் உள்ள மேற்குறித்த சங்க நூல்களின் ஏட்டுச்சுவடிகளில் '' புல்வேய் குரம்பை '' என்றுள்ளதா? அல்லது '' புல்மேய் குரம்பை '' என்றுளதா என்பதைக் காண முயல்வது பயனுடைய ஆய்வாக அமையும் என நம்புகிறேன்.

குறிப்புகள் :

1 *கவிச்சக்கரவர்த்தி ஒட்டக்கூத்தர் பாடியருளிய மூவருலா—பண்டித அ. கோபாலையர், செந்தமிழ் மந்திரம் புத்தகசாலை, சென்னை—1926.*

2 *தேவாரம்—ஆறாம் திருமுறை.*

3 *கல்வெட்டு எண்:* 75, *திருவாரூர்த் திருக்கோயில்,*
—குடவாயில் பாலசுப்ரமணியன், 1988.

4 A. R. E. Nos. 207 and 208 of 1938—39.

5 S. I. I. Vol. XII, No. 149.

6 A. R. E. 1931—32, Page 59.
S. I. I. Vol. XXIV No. 24, No. 203.

7 A. R. E. No. 19 of 1899, S. I. I. Vol. VI No. 455.
A. R. E. 6 of 1936—37 and 150 of 1904.

A Note on Atlases and Maps collections in the Sarasvati Mahal Library, Thanjavur.

P. PERUMAL, B.sc.,(Spl).,M.A.,M L.I.Sc.
CONSERVATOR.

The Thanjavur Maharaja Serfoji's Sarasvati Mahal Library is a standing monument of the intellectual achivements of two succesive dynasties of Thanjavur Nayak and Maratha Kings. Among the Maratha Kings, the Raja Serfoji II (1798—1832) was an eminent scholar in many branches of learning. He had his early education under Father Rev. Schwartz of Danish missionary with great enthusiasm. He took special steps for enrichment of this Library. He had good relationship with the British administrators and traveller, through them he collected and purchased more than 4500 books in English and other European languages.

The Library has more than 46,000 manuscripts both in palmleaf and paper form, which are in Sanskrit, Tamil, Telugu and Marathi languages. It has 50,000 books including the Serfoji Raja's personal collection. Along with the manuscripts and books, this library has the following art and historically important materials.

Modi documents (Marathi Raj Records)	—850 bundles	
Painting on wood and canvass	— 35	nos.
Painting on paper in Book form	— 13	,,
Illustrated manuscripts	— 18	,,
Western musical notation books	— 150	,,
Plans of Thanjavur Revenue Villages	— 107	,,
Pictures and Engravings	— 136	,,
Atlases (which includes 500 maps)	— 35	,,

The Atlases and Maps preserved in this Library are extraordinary important. Most of them were collected and purchased by Raja Serfoji. They were compiled with the survey materials in Land and Sea. The Atlases and Maps dealt with ancient History, Geographical details, sea routes, political divisions. etc, These maps give ancient names of dfferent countries and their boundries. The maps printed in 18th and 19th century India was mentioned as "the Moghul Empire of Hindoostan", Australia as "New Holland", Iran. Irag as ' Persia", and Japan as "Nippon".

The oldest printed book available in this library is an atlas in which the maps printed were in the years 1692, 1693 and 1696. The Atlases consists of 78 plates with description in French Language. The maps having both discription of the countries and navigational directions The maps were made with the compilation of the land survey. This Atlas was rebound in three volumes. A map of India printed in 1692 is available in this atlas.

A map of India entitled as "A map of Hindoostan or the Moghul Empire" from the latest authority inscribed to Sir Joseph Banks Bart, President of Royal Society, which was produced by Mr. J. Rennel, a pioneer in map making on 1st Jan. 1788. The original print of the map (112cmX106cm) is available in this library. The Coastal Tamilnadu and some portions extended up to Ongole in Andrapradesh are refered in this map as the region of Carnatic. Hence the music flourished in this Tamil land was called as Carnatic music. It is significant to note that this map indicates Adams Bridge Maclean in his Glossary of Madras Presidency mentioned that Bridge was used for foot traffic till 1480 A. D. Later it was damaged by breach. An Ariel picture taken by the US satellite shows the existance of the Bridge.

Details of other Atlases and Maps published in 19th Century are:

1) Maps exhibiting the great post roads physical and politcal divisions of Europe from original materials collected from different countries delineated by Arrow Smith, London. 1810.

This Atlas consists of 31 maps and the largest size of the map is 80X92cm.

2 Atlas to Thompsons Alcedo or Dictionary of America and West Indies. Collected with all the most recent authorities and composed chiefly from source and original documents for that work by Arrow Smith. Hydrographer to his Royal highness the Prince regent, London, 1819. This Atlas consists of 21 maps and the largest size is 85X100cm.

3 A Chart of passage along the west coast of Berneo including these islands only that were seen by the fleet in 1781 by George Robertson. London 1788. The Atlas consists of 8 maps. The maps depicts East India Companies ship service and various straits in the sea routes.

4 Collections of maps and plans to accompany to History of the military transaction of the British Nation in Indoostan by Robert Orme, 1862.

These maps and plans depects the military transactions of British and ancient plans of the Forts of different Kingdoms in India. This Atlas consists of 36 plates.

5 Geographia Classica: Geography of the ancients as contained in Greek and Latin classics by Hermon Moll, Geographer, 1721. The Atlas consists of 32 plates.

The maps were drawn on the basis of the classics by Justin, Homer, Hyodoties, Xerophon Caesor. Lucan, about Roman Empire, Egypt, Expedition of Alexandar the great, A map of the Journey of the Jesus Christ. etc.,

6 Maps of the world showing the tracks and discoveries of Captaion Cook, drawn for the best authorities by P J. Russell. London, 1811. This Atlas consists of 29 plates and the largest size is 70X42cm.

7 Maps of the world from the latest discoveries by R. Wilkinson, London 1st Jan 1796, which consist of 48 plates.

This Atlas have an accurate map of Hindoostan and an account maps of Southern Provinces of Hindoostan showing the territories ceded by Tippoo Sahib.

8 A new maps of world with Captain cook tracts. By Lauri whittle, London, 1800.

9 Maps of world, By Baker. London.

This Atlas consists of 26 maps and the largest size of the map is 38X20 cm.

10 Maps of the world in French Language. This Atlas consists of 42 maps.

11 Maps of the world by John carry. Engineer, London. 1801
This Atlas consists of 55 maps.

12 The world from the discoveries and observations made in the largest Voyages and Travels.

13 An Atlas to Guthries Geographical grammar
This Atlas consist of 25 maps.

14 The Chronology and History of the world,
by John Blair, London, 1814.
This Atlas consists of 145 maps.

15 Junior Classical Atlas.
by Musgrave wilkins, London.
This Atlas consist of 8 maps.

16 Map of European countries,
by T. Jaffery's Sculp.
This Atlas consists of 23 maps.

17 The Small British Atlas: Maps to countries of England and Wales.

by John Rocque, 1764.

This Atlas consists of 50 maps.

18 Maps of Bengal and Bahar in 8 parts.

by J. Rennel, London, 1779.

This Atlas consists of 21 maps.

19 Bengal Atlas: Containing maps of the theatre of war and commerce on that side of Hindoostan. 1780.

by James Rennel. London, 1780.

This Atlas consists of 13 maps and the largest size of the map is 62X46 cms.

20 Atlas Coelets: An Atlas of the whole world published in Nuremberg, 1742.

The Atlas consists of 37 maps and dealt about the Astronomical details.

Maps Published in 19th Century:

1 Map of the Dominions of Mysoor at the death of Chick Deo Raja wadeyar in 1704 by Liut. Col Mackenzie, London, 1810, size 34.5X30.5 cms.

2 Sketch showing the different roads through the Peninsula of India under the Presidency of Fort St. George.

by W. J. Butter worth, 1832, size: 34.5X30.5 cms.

3 Map Illustrative of the History of the life and time of Hydar Ali Khan and his descendants; exhibiting the utmost extract of the Mysore dominion under that family and the Principal places connected with the transations of that period down to 1799. This map laid down from the late survey of Mysore to Lieut. Col. Wilks is presented

as a mark of his sincere regard by his faithful humble Servant C. Mackenzie, Madras Oct 22nd 1808. size : 57X51.5 cm.

4 Map of China Sea; Navigation of China sea. size 92X62 cm.

5 Maps of India in 4 parts.
by A. Arrow Smith, London, 1816.
Largest size: 146X66 cms.

6 District of Tanjore, Madras, 1874.
size: 27X19 cms.

7 Map of Mayavaram Taluk, Madras, 1890.
size: 58.5X51.

CONSERVATION

These Atlases and Maps were in damaged condition. Due to acidity, the maps were in brown colour. Some of the maps and binding of the Atlases were damaged by frequent handling and improper storage. The maps were separated, cleaned, deacidified with calcium hydrooxide and calcium-bi-carbonate. For strengthening, the maps were lined with fine mull cloth. Now the Atlases are rebounded and maps are kept in rolled form. These Atlases and maps are available for research.

இராமாயண பதிப்புகள் - ஒரு பார்வை

K. இராமதிலகம்
நூலகர் II
சரசுவதி மகால் நூலகம் தஞ்சாவூர்.

உலக இலக்கியங்களில் தலை சிறந்து விளங்கும் மகா காவியங்களில் இராமாயணமும் ஒன்று. மனிதன் தன் நடத்தையால் தெய்வத்தன்மை அடைவதே வாழ்க்கையின் மேலான குறிக்கோள் என்று எண்ணுவோர் அனைவரும் இராமாயணத்தை உலக இலக்கியங்களுள் உன்னதமானதாகக் கொண்டாடத்தான் வேண்டும். 2000 ஆண்டுகளாக இந்திய சமூகத்தின் பண்பாட்டுக்கு அடிப்படையாக இருந்து வந்திருப்பதும் இந்தக் காவியமே. கீதையில் சொல்லப்படும் கருமம், ஞானம், பக்தி ஆகிய மூன்றும் இராமயணத்தில் உதாரணங்கள் மூலம் விளக்கப்படுகின்றன. பத்மபுராணம், பாரதம், பாகவதம் முதலிய நூல்களில் சிற்சில மாறுதல்களுடன் இராமகதை சொல்லப்படுகிறது. கம்பர் தமிழிலும் கிருத்திவாசர் வங்காளத்திலும், துளசிதாசர் இந்தியிலும் வால்மீகியை ஆதாரமாகக் கொண்டு விரிவான மகாகாவியங்களைச் செய்துள்ளார்கள்.

சமஸ்கிருத இலக்கியத்தில் வால்மீகி ராமாயணம் ஒன்றேயல்லாமல் இன்னும் அற்புத ராமாயணம், அத்யாத்ம ராமாயணம், ஆனந்த ராமாயணம், வாசிஷ்ட ராமாயணம், சேஷ ராமாயணம் என்ற பலவகையான இராமாயணங்கள் உண்டு. இவற்றைப்போலவே பௌத்த, ஜைன ராமாயணங்களும் உண்டு. பிராகிருதம் சமஸ்கிருதம், கன்னடம் ஆகிய மொழிகளில் ஜைன ராமாயணங்கள் தழைத்திருந்தன எனத் தெரிகிறது. ஜைனருடைய இராமாயணங்கள் அவர்களுடைய சமய நோக்கத்திற்கு ஏற்றவாறு அமைந்துள்ளன. இப்போதுள்ள ஜைன ராமாயணங்களில் மிகப்பழையது விமலசூரி எழுதிய பஉமசரிய (பரமசரிதம்) என்பது. இது மகாராஷ்ட்ரீ பிராகிருதத்தில் எழுதியிருக்கிறது. மகாவீரர் நிருவாணத்திற்கு 530 ஆண்டு சென்ற பிறகு இதை தாம் எழுதுவதாகக் கவி சொல்லிக் கொள்வதால் இது கி.பி. 3ஆம் நூற்றாண்டில் இயற்றப்பட்டதென தெரிகிறது.

கன்னட இலக்கியத்தில் "பம்ப ராமாயாணம்" "குமுதேந்து ராமாயணம்", "இராம விஜய சரிதம்", இராமகதாவதாரம் ஜினராமாயணம் என்பன நன்கு அறியப்பெற்றவை என்றாலும் "பம்பராமாயணம்" புகழ் பெற்ற உரையிடையிட்ட செய்யுள் நூல். ஆறாம் சாளுக்கிய விக்கிரமாதித்தன் (1076 — 1126) வாக்கில் நாகசந்திரர் என்பவரால் இயற்றப்பெற்றது.

வால்மீகியால் முதன்முதலில் வடமொழியில் எழுதப்பெற்ற இராமாயணம் காலப்போக்கில் பதிநான்கு இந்திய மொழிகளிலும் காப்பிய வடிவமேற்று மக்களிடையே செல்வாக்குப் பெற்றுத் திகழ்கிறது. ஆயினும் வெவ்வேறு காலத்தில் வெவ்வேறான பண்பாட்டுச் சூழலில் மாறுபட்ட சமயங் களைச் சார்ந்து தோன்றியது.

ஆசியாகண்டம் முழுவதுமாகப் பரவியுள்ள இராமன் கதைக்கு வால்மீகி ராமாயணமே அடிப்படையாகும். இதனையொட்டியெழுந்த ராமாயணங் களிடையே சமுதாய, சமய, பாரம்பரிய வளர்ச்சி நிலையையும் காணமுடியும்.

வேதகால இராமாயணம் :

முதன்முதலில் இராமாயணக் கதைக்குறிப்பு இருக்கு வேதத்தில் காணப்படுகிறது.

சாதகக் கதைகளில் இராமாயணம் :

புத்த மதத்தைப் பரப்பும் நோக்கில் பிராகிருத மொழியில் எழுந்த கதைகளில் இராமன் கதை காணப்படுகிறது. சதரத சாதகம், அனமாக சாதகம், தசரதாகதனம் முதலியனவாகும்.

சமண இராமாயணம் :

சமண மதத்தையொட்டி எழுந்ததாகும்.

சமஸ்கிருத இராமாயணம் :

மகாபாரதத்தில் இராமாயணக்கதை கூறப்பெற்றுள்ளது. பின்னர் காவிய இராமாயணங்களில் "இரகுவம்சம்" காளிதாசரால் இயற்றப்பெற்றது. "பட்டி காவியம்" இதற்கு "இராவணவதம்" என்ற பெயரும் உண்டு. "சானகி அரனா" குமாரதாசரால் கி. பி. 8ஆம் நூற்றாண்டில் எழுதப்பெற்றது. இராம சரிதம் 9 ஆம் நூற்றாண்டில் "அபிநந்தனால்" எழுதப்பெற்றது. 'இராமாயண மஞ்சரி' சேமேந்திரன் என்பவரால் புரான நடையில் எழுதப்பெற்றது. "தசாவதார சரிதம்" காசுமீரில் கி. பி. 11 ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த சேமேந்திரா என்பவரால் எழுதப்பட்டது. "இராமாயண பாரதம்" கவிராச னால் கி. பி. 12 ஆம் நூற்றாண்டில் எழுதப்பட்டது. "இரகுவீரசரிதம்" மல்லிநாதரால் கி. பி. 14 ஆம் நூற்றாண்டில் எழுதப்பெற்றது. "உத்தரராகவ" சகலியமாலா என்பவரால் கி. பி. 14 ஆம் நூற்றாண்டில் இயற்றப்பெற்றது. "இராமலிங்கமிர்தா" அத்தவைதா என்னும் புலவரால் கி. பி. 17 ஆம் நூற்றாண்டில் எழுதப்பெற்றது. "தத்துவ சங்கிரகராமாயணம்" இது இராம ப்ரக்மானந்த சரசுவதி என்பவரால் எழுதப்பெற்றது.

"இராமாயண சம்பூ" போசன் என்பவரால் எழுதப்பெற்ற சம்பூ காவிய வகையைச் சார்ந்தது. இவிர நாடக இராமாயணங்களிலும் புராண இராமாயணங்களிலும் புராண இராமாயணங்களிலும் இராம கதை சித்தரிக்கப் பெற்றுள்ளது.

தமிழ் இராமாயணம் :

சங்க இலக்கியங்களிலும் காப்பியங்களிலும் இராமாயண நிகழ்ச்சிகள் எடுத்துரைக்கப்படுகின்றன. தொல்காப்பியப் புறத்திணை இயல் நூற்பாக் களுக்கு நச்சினார்க்கினியர் உரை கூறும்போது ஆசிரியப்பாவில் அமைந்த இராமாயண நிகழ்ச்சிகளை எடுத்துக்காட்டாகக் கூறியுள்ளார். தேவாரப் பாடல்களிலும் இராமாயணக் குறிப்பு உண்டு. திருஞானசம்பந்தர் தம் பதிகங்களின் எட்டாம் பாடலில் இராவணனைப் பற்றிய குறிப்பைத் தந்துள்ளார். திருநாவுக்கரசர் திரு இராமேசுவரப் பதிகத்தில் இராமன் சிவனை வழிப்பட்ட செய்தியைக் கூறியுள்ளார். பெரியாழ்வார், திருமங்கை யாழ்வார் ஆகியோர் இராமனின் அவதார மகிமையை விளக்கியுள்ளனர். தமிழில் தோன்றிய இராமாயணங்களுள் மிகச் சிறந்ததாகக் கருதப்படுவது கம்பராமாயணம். ஒட்டக்கூத்தர் 'உத்தரகாண்டம்' என்ற நூலை இயற்றி யுள்ளார்.

கம்பருக்குப் பின் அருணாசலக்கவி கீர்த்தனை வடிவில் இராமன் கதையை தந்துள்ளார். இது "இராம நாடக கீர்த்தனை" என்று வழங்கப் படுகிறது. கோட்டையூர் சுப்பிரமணிய அய்யர் "இராமாயண வெண்பா" என்ற நூலை இயற்றியுள்ளார். மதுர கவி சீனிவாச ஐயங்காரும் ஒரு "இராமாயண வெண்பா" பாடியுள்ளார். இராமசாமி அய்யர் 'இராமசாமியம்' என்ற நூலை எழுதியுள்ளார். மற்றும் புலவர் குழந்தை எழுதியுள்ள 'இராவண காவியம்' எனும் நூல் இராவணனை மானமுள்ள பெருவீரனாகவும் புகழ்ந்து கூறியுள்ளார்.

தெலுங்கு இராமாயணம் :

தெலுங்கு மொழியில் பல இராமாயணங்கள் தோன்றியுள்ளன. அரங்கநாத இராமாயணம் கி. பி. 13-ஆம் நூற்றாண்டில் எழுதப்பெற்றது. பசுகரா இராமாயணம் காவியமாக எழுதப்பெற்ற முதல் தெலுங்கு இராமாயணம். எர்ரண இராமாயணம் கி பி. 14-ஆம் நூற்றாண்டில் தோன்றியது. தற்போது இந்நூல் கிடைக்கவில்லை. "இராமகதா" அன்னமாசாரியார் என்பவரால் கி. பி. 15-ஆம் நூற்றாண்டில் எழுதப்பெற்றது.

கன்னட இராமாயணம் :

கன்னட மொழியில் கி. பி. 10-ஆம் நூற்றாண்டில் பொன்னன் என்ற கவிஞர் "புவனகை இராமாப்யுதயம்" என்ற நூலை எழுதினார். நாகசந்திரன்

என்பவர் 11-ஆம் நூற்றாண்டின் இறுதியில் "இராமசரித புராணம்" என்ற பம்ப இராமாயணத்தை எழுதியுள்ளார். குமார வால்மீகி "தொரவெ இராமாயணம்" என்ற நூலை எழுதியுள்ளார். இதன் காலம் கி. பி. 16-ஆம் நூற்றாண்டு. முத்தண்ணா என்பவர் கி. பி. 20-ஆம் நூற்றாண்டின் தொடக்கத்தில் அற்புத இராமாயணத்தை உரைநடை நூலாக எழுதியுள்ளார்.

மலையாள இராமாயணம் :

12-ஆம் நூற்றாண்டு, கி. பி. 14-ஆம் நூற்றாண்டில் இராம பணிக்கர் "கணச இராமாயணம்" என்ற காவியத்தையும், எழுத்தச்சன் "அத்யாத்ம இராமாயணம்" என்ற காப்பியத்தையும் படைத்துள்ளார்கள்.

மராத்தி இராமாயணம் :

இம்மொழியில் புகழ்பெற்ற நூல் "பாலவர்த இராமாயணம்" ஏகநாத்து என்பவரால் 17-ஆம் நூற்றாண்டில் எழுதப்பெற்றது.

ஒரிய மொழி இராமாயணம் :

புகழ்பெற்ற "விசித்திர இராமாயணம்" விசுவநாத சூன்தியா என்பவரால் எழுதப்பெற்றது. கி. பி. 14-ஆம் நூற்றாண்டில் சரளதாசர் என்பவர் "விலங்கா இராமாயணமும்", கி. பி. 15-ஆம் நூற்றாண்டில் பலராமதாசர் ஓர் இராமாயணமும் இயற்றியுள்ளார்.

குசராத்தி இராமாயணம் :

நர்மத்து என்பவர் கி. பி. 19-ஆம் நூற்றாண்டில் "இராமாயணசர்" என்ற நூலை எழுதியுள்ளார்.

இந்தி இராமாயணம் :

குறிப்பாகத் துளசி இராமாயணத்தைத் தெற்காசியாவின் சிறந்த புத்தகங்களுள் ஒன்றாக யுனெசுகோ நிறுவனத்தின் அறிக்கை ஒன்று குறிப்பிட்டுள்ளது.

பஞ்சாபி இராமாயணம் :

குலோப்சிங் என்பவரால் கி. பி. 18-ஆம் நூற்றாண்டில் "அத்யாத்ம இராமாயணத்தையும்", 19-ஆம் நூற்றாண்டில் பக்த காளிதாசர் ஓர் இராமாயணத்தையும் இயற்றியுள்ளார்.

வங்க மொழி இராமாயணம் :

கிருத்திவாச பண்டிதரால் இயற்றப்பெற்றது "கிருத்திவாச ராமாயணம்". மாலதரர் என்பவரால் கி. பி. 15-ஆம் நூற்றாண்டில் "கிருட்டிண விசயம்" என்னும் நூலும் எழுதப்பெற்றது.

காசுமீரி இராமாயணம் :

திவாகர் பிரகாசு என்பவர் காசுமீர மொழியில் கி. பி. 18-ஆம் நூற்றாண்டில் "இராமாவதார சரித்திரம்" என்ற நூலை எழுதியுள்ளார்.

இதுபோன்று பல்வேறு காலங்களில் பல்வேறு இந்திய மொழிகளில் இராம கதையை மையமாக வைத்து எழுதப்பெற்ற இராமாயணம், தஞ்சை சரசுவதி மகால் நூலகத்திலுள்ள அச்சுப்புத்தகங்களில் ஒருசில புத்தகங்களுக்கு மட்டுமே குறிப்புகள் கிடைக்கின்றன. காரணம், இவை இராமாயணத்தில் வரும் கிளைக்கதைகளின் ஒவ்வொரு பகுதியை மட்டும் மையமாக வைத்து எழுதப்பட்டுள்ளது. மற்றும் சமஸ்கிருதம். ஆங்கிலம், தமிழ், மராத்தி, இந்தி, தெலுங்கு ஆகிய மொழிகளில் உள்ள இராமாயணம் என்னும் தலைப்பில் உள்ள புத்தகங்களை மட்டும் அகரவரிசைப் பட்டியலிட்டுப் பின்னிணைப்பில் கொடுக்கப்பட்டுள்ளது.

இனி பல்வேறு மொழிகளில் பல்வேறு தலைப்புகளில் உள்ள இராமாயணத்தைக் காண்போம்,

(உ–ம்) ஜைன ராமாயணம் by ஸ்ரீமான் வி. ஆர். ஸ்ரீநிவாஸ ஐயங்கார், *1928.* T. *786.*

வைதிக மதத்தைப்பற்றின பலரால் ராமசரிதம் செய்யப்பட்டு ராமாயணமாக வழங்குவதே இதுவரையில் நமக்கு தெரியும். ஆனால் ஜைன. பௌத்த மதத்தைச் சேர்ந்தவர்களும் ராமசரிதத்தைச் செய்திருக்கிறார்க ளென்றும் அவைகளில் தங்களின் மத கோட்பாடுகளுக்குட்பட்டு தங்களுக் கென்றுள்ள மரபுகள்படி பயன்படுத்திக்கொண்டார்கள் என்பதை அறிய முடியும்.

ஜைன ராமாயணத்தில் ராவணன் ஒருதலை உள்ளவனாகவும் லக்ஷ்மணன் ராவணனைத் தன் சக்ராயுதத்தால் கொன்றான் எனவும், ராமனுக்கு சீதை, ப்ரபாவதீ, ரதிநிபா, ஸ்ரீதாமா என நான்கு பார்யைகள் எனவும் கூறப்பெற்றுள்ளது.

பௌத்த ராமாயணத்தில் ராமன் கிழங்கு, பழங்களை புசித்ததாகவும், சீதை ராமனுடைய உடன்பிறந்தாளாகவும் ஜீவஹிம்ஸையை விரும்பாதவர்கள்

என்பதால் ராவணனுடன் யுத்தம் முதலியவை பௌத்த ராமாயணத்தில் காணப்படவில்லையென்றும் தெரியவருகிறது.

யவனராமாயணம்: சீதையும், ஹெலனும் தெய்வாம்சத்தால் பிறந்தவர்கள். யவன ராமாயணத்தில் காணப்படும் பல விஷயங்கள் இதிஹாச புராணங்களை ஞாபகப்படுத்துகின்றன.

கிறிஸ்தவ ராமாயணம்: இஸ்ரேலில் உள்ளவர்களுடைய சரித்திரம் சொல்லப்படுகிறது. சாலோமனை யே ராமனாக எண்ணவேண்டியிருப்பதாக வருகிறது.

அத்யாத்ம ராமாயணம் T. 7416:

இதில் ஸ்ரீராமருடைய சரிதத்தை உமாதேவியிடம் பரமசிவன் சொல்வதாக உள்ளது. இதில் சுந்தர காண்டம், உத்தர காண்டத்துடன் முடிவடைகிறது. இராவணனுடைய பிறப்பு, தவப்பெருமைகளும், வீரச் செயல்களும் விஸ்தாரமாகக் கூறப்பெற்றுள்ளது

அற்புத ராமாயணம் T. 7152:

சீதாதேவியின் மகிமையைக் கூறுவது அற்புத ராமாயணம். இதில் சீதா தேவியே மூலப்பிரகிருதியென்றும் ஸ்ரீராமரே பரமாத்மாவென்றும் விவரிப்பதாகக் கூறுகிறது. இராம சபையில் ரிஷிகணங்களின் முன் சீதாதேவி ஸஹஸ்ரமுக ராவணன் வரலாற்றைக் கூறுவதாகவும் ஸ்ரீராமர் ஆயிர நாமங்களால் சீதையை ஸ்தோத்திரித்ததாகவும் கூறப்படுகிறது. மேலும் சீதாதேவி காளியுருவங்கொண்டு ஸஹஸ்ரமுக ராவணனை வதஞ்செய்த அற்புதத்தைக் கூறுவதாக உள்ளது.

துளசி ராமாயணம் T. 3551, 1957:

இது ராமசரித மானஸ் எனும் இராமாயணத்தின் சுருக்கம். முக்கியமாக சிவ விஷ்ணு அபேதம், அத்வைத தத்துவம், தர்மங்கள், ராமபக்தி போன்ற விஷயங்களை விளக்குவதாக உள்ளது. இந்தி மொழியில் மிகவும் சிறப்பாகப் போற்றப்படுகிறது.

ஸ்ரீவித்யா ராமாயணம் T. 7566:

தேவியின் மகிமை பக்தியுடன் வர்ணிக்கப்பட்டிருக்கிறது. அம்பாளுடைய அருளால் ஸ்ரீராமனுடைய காரியங்களை நடத்தி வந்ததாகக் காணப்படுகிறது. சீதாதேவியே கருணை வடிவான காமாக்ஷியின் அருள் பெற்றவள் என்பதாகவுள்ளது.

பம்ப ராமாயணம் Hi. 1590

நாகசந்திரன் என்பவர் 11ஆம் நூற்றாண்டில் கன்னட மொழியில் பம்ப இராமாயணத்தை இயற்றினார். இந்த பம்ப இராமாயணம் ஹிந்தி மொழி நூலில் உள்ளது. இதில் ராமன் சமணமதக் கோட்பாடு உடையவன் எனவும், கிட்கிந்தையில் வாழ்ந்தவர்கள், வனவாசிகள் அல்ல எனவும், ராவணன் அரக்கன் அல்ல எனவும், கொலை வேள்வியை எதிர்த்த நல்லரசன் எனவும் கூறப்பெற்றுள்ளது.

பாவார்த்த ராமாயணம் Ma. 2080

இது மராத்தி மொழி நூலில் உள்ளது. சுந்தர காண்டமும், யுத்த காண்டமும் உள்ளது. வால்மீகி இராமாயணம், அத்யாத்ம இராமாயணம் ஆனந்த இராமாயணம் இவை மூன்றையும் ஒட்டி அமைந்துள்ளது.

கம்ப ராமாயணம்

கம்பர் தம் இராமாயணத்தில் 6 காண்டங்கள், 116 படலங்களில், 10436 இயற்றியுள்ளார். தம் காப்பியத்திற்கு "இராமாவதாரம்" என்ற பெயரையே சூட்டினார். இவர் வால்மீகி இராமாயணத்தை அடிப்படையாகக் கொண்டாலும் தமிழ்ப் பண்பாட்டிற்கு ஏற்பக் கதையில் மாற்றங்களைச் செய்துள்ளார். பாலகாண்டத்தில் மிதிலைக்காட்சிப் படலம், சந்திரசயிலப் படலம், வரைகாட்சிப் படலம், பூக்கொய் படலம் ஆகியனவும், யுத்த காண்டத்தில் இரண்யவதைப் படலம், மாயாசனகப் படலம் ஆகியவையும் கம்பரின் தனிப்படைப்புகளாகும்.

இராமாயண வெண்பா T. 1888

வித்துவான் சுப்ரமண்ய ஐயரவர்களால் இந்நூல் முழுவதும் வெண்பா யாப்பில் இயற்றப்பெற்றுள்ளது. கவிச்சக்ரவர்த்தி கம்பன் வழியொட்டிப் பாடப்பெற்றுள்ளது. ஆறு காண்டங்களும் நூற்றுப் பதினைந்து படலங்களும் 9379 பாடல்களும் கொண்டுள்ளது.

இவ்வாறு இராமாயணம் என்னும் தலைப்பில் உள்ள ஒவ்வொரு புத்தகத்தையும் பற்றி விரிவாக எழுதிக்கொண்டே போகலாம். ஆனாலும் குறிப்பாக இராமாயணம் பற்றிப் பல்வேறு மொழிகளிலும் பல்வேறு காலங்களில் எழுந்த நூல்களைப் பற்றிய ஒரு சில அச்சுப் புத்தங்களுக்கு மட்டும் சிறு குறிப்பு எழுதப்பட்டுள்ளது.

SANSKRIT BOOKS

வ. எண்.	தலைப்பு	புத்தக எண்
1.	Abhinava Campu Ramayanam	S. 7355
2.	Abhinava Sitha Ravana Samvada Jhari	4244
3.	Adhyatma Ramayanam	6222
4.	Adyatma Ramayanam	11613. 2011
5.	Ananda Ramayanam	570
6.	Bala Ramayanam	3667, 6596. 6592, 5342, 6911
7.	Bhusundi Ramayanam	6417
8.	Champu Ramayanam	11225, 10275, 10227. 10275, 85, 11493, 7412. 5147, 7836
9.	Data of Sri Rama	11091
10.	Dharmakutam	170[illegible], 416, 18
11.	Divya - Ramayana	6[illegible]82
12.	Gayatri Ramayanam	214
13.	Index to Valmiki Ramayana	8341
14.	Janaki Jeevanam	11092
15.	Janaki Parinaya	10831, 10832
16.	Janakiharanam	4158
17.	Kamban	U. G. 313
18.	Kambaramayanam in Sanskrit	S. 3269
19.	Pranama Ramayanam	5635
20.	Pada Index of Valmiki Ramayana	3817
21.	Raghaviya	1455
22.	Ramabhyuda Yatra	4715
23.	Ramachandra Natakam	10581
24.	Ramacharita Manas	11867
25.	Ramalasayanam	10550
26.	Rama Keerthi Mahakavyam	11407
27.	Ramapancasati	2087
28.	Ramasaramaslogam	7611
29.	Ramashyakuyo Granthaha	7134
30.	Ramayanam	1889. 11241, 11117. 11068-70, 10301. 10286
31.	Ramayanam Part I & II	10070-71, 10073
32.	Ramayanam	10269—10271, 10301, 11442–11443 11492, 1087

வ. எண்.	தலைப்பு	புத்தக எண்
33.	Ramayanam 3 vols.	S. 6155—57
34.	Ramayanam	UG. 120-127, 389
35.	Ramayanam	S. 11241, 11188, 5485, 6364, 3711-3712 3714. 3807. 11896. 5508. 5055, 5064, 2808, 5051, 3199
35.	Ramayana sharata, Sangraha stotram	3172, 1583
37.	Ramayana Dairy	1444
38.	Ramayana Kishkinda	4350
39.	Ramayana Mahabarata Rajanitibinduh	6491
40.	Ramayana Manjari	5726. 11826
41.	Ramayana Sangrah	10516
42.	Ramayana Sansksheda Sarga Rasavada	11703
43.	Ramayana Sara Sangraha	5739. 727
44.	Ramayanasopan	6592
45.	Ramayana — Sundarakandam	3289
46.	Ramayanatatparya Sangraha	7129
47.	Ramayana Ayodhyakandam	4355
48.	Ramayana Uttarakandam	5067, 4356.
46.	Ramayana — Uddakandam	11440
47.	Ramayana - Yuddhakandam	5066. 5063. 4351
48.	Riddle of the Ramayana	UG. 76
49.	Samkshipta Valmiki Ramayanam	S. 6394
50.	Ramayana	1526 - 27
51.	Saumitri Sundari Charitam	3309
52.	Sita Charitam	6436
53.	Sitaravanasamvadajhary	7074
54.	Sriharicarita - Mahakavya	5796
55.	Srimat Ramayanam 2 parts	2470 - 71
56.	Srimat Ramayanam	3708. 3713, 3709, 3710. 3711. 3712, 4577. 11628 11632, 2550 - 2556, 10356 - 357, 10260 - 971. 11188. 441 - 446, 2554. 2559
57.	Suguna Ramayana	7485
58.	Sundarakanda Samshepa	663. 1950
59.	Sundararamayanam and Sati Vilasita	4426
60.	Sundarakanda of Valmikiramayana	2579

வ எண்.	தலைப்பு	புத்தக எண்
61.	Uttararamayana	10289
62.	Uttara Rama Charitram	13355, 4451, 4925, 3202
63.	Vaidahi Vivaham	2582 - 83
64	Valmiki Bnavadeepa	10202
65.	Valmiki and Kalidasa ki Kavyakala	10576
66.	Valmiki Ramayana	2900
67.	Valmiki Ramayana Kosha	3419, 4583, 5224 – 5225, 5485, 5716 - 17
68.	Valmiki Ramayana	6364, 6545, 6970
69.	Valmiki Ramayana Part I & II	10070 - 10071
70.	Valmiki Ramayanam	1510
71.	Valmiki Ramayanam Part 1 & 2	1733 – 34
72.	Valmiki Ramayana	8345
73.	Vedanta Ramayan	1055
74.	Ravanarjunya	2712

ENGLISH BOOKS

1.	Beauties of Ramayana	E. 9498
2.	Comparative study of Kamba Ramayana & Tulasi Ramayana	7363
3.	Critical review of the story of Ramayana	7573
4.	Holy lake of the acts of Rama	4010
5.	India in the Ramayana Age with 126 illustrations and one map.	2630
6.	Kamba Ramayana — A study	3923, 1166
7.	Lectures in Ramayana	1082
8.	Rama Gita	6750
9.	Rama the beloved of Aryapatra	2111
10.	Ramayana	7929-30, 4775
11.	Ramayana and other verses	2462
12.	,, of Valmiki	2161
13.	,, veres	6216
14.	,, All India Meet '89	9363
15.	,, of Valmiki	2161
16.	Samkshepa Ramayana	7824
17.	Socio-political study of the Valmiki Ramayana	4268

வ. எண்.	தலைப்பு	புத்தக எண்
18.	Some old lost Rama Plays	2991
19.	Studies in Ramayana	1137, 11283
20.	Uttararamacharita	9222
21.	Valmiki Ramayana	3896
22.	,, ,, an appreciation	9538
23.	Vasistha ,, a study	6803
24.	Vyasa and Valmiki	2646
25.	Wanderings of Rama	11223

HINDI BOOKS

1.	Adyatma Ramayana	Hi 18
2.	Hart Rama Bajan	27
3.	Kundaliya Ramayana	1751
4.	Mula Ramayana	99, 2810
5.	Paumehhriu	727 - 721
6.	Rama Katha	2429
7.	Ramayanam	1820, 1749
8.	Sarangathi Rahasya	80
9.	Sri Ramacharita	2696
10.	Sri Rama Geeta	32
11.	Tulasi Ramayan aur Pampa Ramayan	1590
12.	Valmiki Ramayana mem Rajya Samaj Wam artha Vyavasta	1724
13.	Valmikirasanamrutha	2561
14.	Valmiki Ke Vana aur Vruksha	2697
15.	Visva Jyoti Ramayana ank	1048 - 49

TELUGU BOOKS

1.	Achha Telugu Ramayanamu	Tel. 267
2.	Adbhuta Ramayanamu	940
3.	Adyatna ,,	1177
4.	Andhra Champu ,,	1344
5.	Andhra Valmiki ,,	917-921
6.	Anjeneya ,,	505, 506, 507
7.	Atyatma ,,	1603
8.	Bala Ramayana Teeka	968

வ. எண்.	தலைப்பு	புத்தக எண்
9.	Chaturmuka Ramayana	1379
10.	Dasarathi Satakamu	260
11.	Janapriya Ramayanamu	1149
12.	Panchami	316
13.	Prakruta Vangmaya mula Ramakatha	1550
14.	Ranganatha Ramayanamu	86, 241
15.	Ragava Pandaviyamu	253
16.	Rama katha	792, 793
17.	Ramayana Paramardham	839
18.	„ Sudhalahari	853
19.	„ Vyakhya	1025
20.	„ Vartalu	1209
21.	Ramayanamu	1678
22.	Saptasati Saramu	317
23.	Shodasi Ramayana Rahasyamulu	714
24.	Sita Ramanjaneya Samvadamu	647, 126, 284, 285, 287
25.	Sri Harshanaishadham	1138, 1139, 1151
26.	Srimad Ramayana Anuvada Vaisihtamu	1551
27.	Srimad Ramayanamu	719. 780. 781, 771, 772, 773-775 776-777, 778, 779. 782-786, 1005. 1625. 1604-160[illegible]. 1392
28	Srimaunavya Bala Ramayanamu	388
29.	Sri Pattabi Ramayanamu	1040
30.	Sri Rama Katha	1356
	„ Kandamu	1358. 1350
31.	Sri Ramavatara Tatva Vicharamu	301
32.	Sri Ramayanamu	1453-1372. 402
33	Sri Ramayanamu Vol. III	159, 160
34.	Sri Ramayanmu	151. 129-130
35.	Sri Renganatha Ramayanamu	1675
36.	Sri Sesha „	1351
37.	Sri Tarkanama „	1208
38.	Svabna Uttara Sri „	1567
39.	Tara „	281
40.	Uttara „	785, 11500
41.	Valmiki „	999. 1002

MARATHI BOOKS

வ. எண்.	தலைப்பு	புத்தக எண்.
1.	Adyatma Ramayana	Ma. 1279
2.	Ananda ,,	449
3.	Angada Sistaca	1105-1110
4.	Addayatma Ramayana	719
5.	Astothara Sathaha Ramayana	1509
6.	Janaki Parinaya & Nataka	1342
7.	Mantra Ramayana	1410, 1280, 1191-1192, 694
8.	Moropantha ,,	1341, 755, 1170
9.	Marathi-Bashantarasaha Ramayan	563
10.	Ramacharitra	1294
11.	Ramanujaya	735
12.	Ramayana	2157-2161
13.	Ramayana Part I & Part III	1591-1592-94
14.	Ramayana	209, 1302-1304
15.	Satika Adbutha Ramayana	1582
16.	Sloka Bada Ramayana	604-605
17.	Sri Bhavartha Ramayana	2080, 2152-2154
18.	Sri Ramacharita Manas	2177
19.	Sri RamaJannadaya	1093
20.	Sri Sitha	1506
21.	Sundarakanda	969
22.	Uttara Ramacharitra	1590
23.	Uttara Ramacharita Manas	1360
24.	Valmiki Ramayana Parishna	445

தமிழ் புத்தகங்கள்

1.	அற்புத ராமாயணம்	T. 7155
2.	இராம நாடகம்	9788
3.	இராமாயணம்	9613
4.	இராம நாடகம்	8511

வ எண்.	தலைப்பு	புத்தக எண்.
5.	இராமாயண வெண்பா	9281
6.	இராமரும் இராவணனும்	8127
7.	ராமாயணம் — உத்தரகாண்டம்	7280
8.	இராம நாடகம்	7149
9.	இராமாயண வினா—விடை	6810
10.	இராவணன் மாட்சியும் வீட்சியும்	3792
11.	இராமாயண வெண்பா	1888
12.	இராமாயணம்—சுந்தரகாண்டம்	1365
13.	உத்தரராமாயண நாடகம்	3022
14.	உத்தரராமாயண வசனம்	2158
15.	கம்பராமாயணம்—யுத்தகாண்டம்	9619
16.	கம்பனும் ஷேக்ஸ்பியரும்	8716
17.	கம்பனும் சடையனும்	8733-34
18.	கம்பராமாயணம்	8933
19.	கம்பரும் வான்மீகரும்	8430
20.	கம்பராமாயண முதற்செய்யுட் சங்கோத்தர விருத்தி	9242
21.	கம்பராமாயண ஆராய்ச்சி	8429
22.	கம்பராமாயண கவியும்—உரையும்	8427–8428
23.	கம்பனும் பக்தி இயக்கமும்	8030
24.	கம்பராமாயணக் கிளைக்கதைகள்	7817
25.	கம்பராமாயணம்—சுந்தரகாண்டம்	7174
26.	கம்பர் காட்டும் கார்காலம்	6905
27.	கம்பர் காட்சி	6904
28.	கம்பராமாயணக்கௌஸ்துபம்	6774
29.	கம்பராமாயணம் — கிஷ்கிந்தா காண்டம்	6333
30.	காயத்ரீ ராமாயணம்	5913
31.	கம்பராமாயணம் — அயோத்தியா காண்டம்	6144, 6145
32.	கம்பன் கண்ட இராமன்	5368
33.	கம்பன் கண்ட அறநெறி	4932
34.	கம்பராமாயணம்	4094 – 4103
35.	கம்பராமாயண அகராதி	4004

வ. எண்.	தலைப்பு	புத்தக எண்.
36.	கம்பராமாயணம்	3905
37.	கம்பனது கதாபாத்திரங்கள்	3760
38.	கம்பராமாயணக் கதைகள்	3691
39.	கம்பர் விருந்து	3690
40.	கம்பராமாயணம்	3669-3674
41.	கம்பர் யார்?	3638
42.	கம்பர்	3261
43.	கம்பராமாயண விரிவுரை Part I & II	2749, 2750
44.	கம்பராமாயண முதற்செய்யுட் சங்கோத்தர விருத்தி	2622
45.	கம்பராமாயணம்	2470
46.	கம்பன் கலைநிலை	1862
47.	கம்பராமாயணம்	1898-1981
48.	கம்பராமாயணச் சுருக்கம்	2435
49.	கம்பராமாயணம்	1541
50.	கம்பராமாயணம்	1805, 1806
51.	கம்பரும் சோழனும்	1506
52.	கம்பன் கவி அமுதம்	857
53.	கம்பர்	18
54.	கம்பராமாயணம்	56-60
55.	சுந்தரராமாயணம்	7760
56.	சித்ர ராமாயணம்	9685
57.	துளசி ராமாயணம்	9625
58.	துளசி ராமாயணம்	3651
59.	திரிவேணி ராமாயணம்	5476-5481
60.	இராமாயணம்	4355-4259
61.	வால்மீகி ராமாயணம்	6305
62.	வால்மீகி இராமாயணம்	6305
63.	வால்மீகி கண்ட சீதை	5409
64.	வால்மீகி ராமாயணம்	5388
65.	வாலிமோட்சம் மூலமும் – உரையும்	4159
66.	வால்மீகி ராமாயண வசனம்	4141

வ. எண்.	தலைப்பு	புத்தக எண்
67.	வால்மீகி ராமாயணப் பாட்டும், ஞான ராமாயணக் கும்பலும்	3942
68.	வாலிவதம்	3685
69.	வாலிவதை	3257
70.	ஸ்ரீமத் ராமாயணம்	9495 - 9496
71.	ஸ்ரீமத் இராமாயண ஓடம்	8288
72.	ஸ்ரீவித்யா ராமாயணம்	7566 - 67
73.	ஸ்ரீராமர் அம்மானை	7096
74.	ஸ்ரீமத் ராமாயண சுந்தரகாண்டம்	5163
75	ஸ்ரீமத் ராமாயணமும், சர்வலோக யோக க்ஷேமமும்	3000 — 30001
76.	இராமாயணம்	4775
77.	அத்யாத்ம ராமாயணம்	7416
78.	ஸ்ரீராமாயண தனிச்சுலோகம்	2891
79.	ஸ்ரீமத் வால்மீகி ராமாயணம்	2671 — 2677
80.	ஸ்ரீராமகீர்த்தன மஞ்சரி	2656
81.	வால்மீகி ராமாயண வசனம் (சிதிலம்)	146 — 150

சப்தரிஷி நாடி
(நூல் விளக்கம்)

M. சீராளன்
நூலகர் II
சரசுவதி மகால் நூலகம், தஞ்சாவூர்.

முன்னுரை :

நாடி சாத்திர நூல்களைச் சோதிடம், மருத்துவம் என இரு பெரும் பிரிவுகளாகப் பிரிக்கலாம். சோதிடம் பற்றிய செய்திகளைக் கூறும் சோதிட நாடி நூல்கள் பல உள்ளன. அவையாவன; சூரிய நாடி, சந்திர நாடி, குச நாடி, புத நாடி, சுக்கிர நாடி, குரு நாடி, சனிநாடி, இராகுநாடி, கேது நாடி, சர்வ சங்கிரகநாடி, பாவ நாடி, துருவ நாடி, சருவ நாடி, சக நாடி, தேவி நாடி, மத்திய சங்கிதை நாடி, தேவகோளநாடி, நவநாடி, சப்தரிஷி நாடி அல்லது சப்தரிஷி வாக்கியம், சுகர்நாடி அல்லது சுகர் வாக்கியம், நந்தி நாடி, வசிட்டர் நாடி, கௌசிக நாடி, அத்திரி நாடி, உமாமகேசுவர நாடி, ஈசுர நாடி, பீம நாடி இடும்பி நாடி, மும்மலக்கன்னி நாடி, பால கௌமார நாடி, மார்க்கண்டேயர் நாடி, சகாதேவர் நாடி, சந்திரகலா நாடி, பிருகு சங்கிதை நாடி, பார்க்கவ நாடி, காகபுசுண்டர் நாடி, அகத்தியர் நாடி முதலியனவாம்.

இந்நாடி நூல்கள் பெரும்பாலும் தெய்வீகமான சக்தியை உடைய முனிவர்களால் எழுதப்பட்டதென்பர். இதில் மிகவும் வியக்கத்தக்க நுண்ணிய பலாபலன்கள் சொல்லப்பட்டிருக்கின்றன. சாதாரண சோதிடர்களால் சொல்லக் கூடியவை அல்லது சாதகருக்கே நினைவிலில்லாத சில சூக்குமமான விவரங்கள் கூட நாடி நூலில் சொல்லப்பட்டிருக்கின்றன. சத்தியாசாரியார் தம்முடைய துருவ நாடி நூலில் முதலில் தம்முடைய சோதிட வித்தையின் உதவியாலும் தம்முடைய ஞான திருட்டியின் உதவியாலும் மானிடர்களின் சோதிடப் பலாபலன்களைச் சொல்லப்போவதாகத் தெரிவிக்கின்றார். நாடி நூலில் பொதுவாக ஒரு சாதகருடைய முன்பின் பிறப்புகள், இந்தப் பிறப்பு ஆகியவற்றின் பலன்களும் முற்பிறப்பில் ஏற்பட்ட வினை அல்லது பாபம் அல்லது சாபம் இந்தப் பிறப்பில் இவற்றுக்குச் செய்ய வேண்டிய சாந்தி அல்லது பரிகாரம் ஆகியவை சொல்லப்படுகின்றன. இந்தச் சாத்திரத்தை வாசிப்பவர் நன்மார்க்கத்தில் தம் வாணாளைக் கழிக்க வேண்டும் என்றும் தெய்வ பக்தியுடனும் தெய்வ சேவையுடனும் வாழவேண்டியதவசியம் என்றும் அறிந்து கொள்வர். ஆகையால் நாடி நூலில் கொடுக்கப்பட்டுள்ள சாதகங்கள் தம்முடைய பயிற்சிக்கும் வளர்ச்சிக்கும் உதவியாயுள்ள எடுத்துக்காட்டுச்

சாதகங்கள் ஆகும். இந்நூலில் கண்டுள்ள சாதகங்களை உடையவர்களுக்கு இதில் கொடுக்கப்பட்டுள்ள பலாபலன்கள் தங்களுடைய சாதக பலா பலன்களாகப் பயன்படும்.

சோதிட சாத்திரம் பலவிதமான பாகங்களாகப் பிரிக்கப்படும். இவற்றில் பலபாக சோதிடம் (Judicial Astrology) ஒன்றாகும். இந்தப் பலபாக சோதிடத்தில் இரண்டு வகைகள் உண்டு. ஒன்று சாதாரண சோதிடம் அல்லது ஓரா சாத்திரம் எனப்படும். மற்றொன்று நாடி சோதிடம் என்ற நாடி சாத்திரம். இச்சோதிட நூலின் ஒரு பிரிவு தமிழில் நாடி நூலாக இருந்து வருகிறது. இவை மும்மூர்த்திகளின் நாயகிகளாகிய இலக்குமி, பார்வதி, சரசுவதி இவர்களின் முன்னிலையில் முனிவர்கள் கூறுவதாக எழுதப் பட்டுள்ளன.

சப்தரிஷி நாடி :

சப்தரிஷி நாடி என்னும் இவ்வரிய அனுபவ சோதிட நூல் பண்டைக் காலத்து ஓலைச்சுவடிகளிலிருந்து படியெடுக்கப்பட்டவையாகும். இச்சுவடிகள் சென்னை அரசினர் கீற்றிசை சுவடிகள் நூலகத்தில் (Government Oriental Manuscripts Library, Madras) உள்ளன. ஓலைச்சுவடிகளில் மேஷம் முதல் மீனம் ஈறாக உள்ள பன்னிரண்டு லக்னங்களும் உள்ளன. இவற்றை படியெடுப்புச் செய்து சோதிட வல்லுநர்களால் மேஷம், ரிஷபம், மிதுனம், கடகம், சிம்மம், கன்னி முதலிய ஆறு இலக்னங்களையும பதிப்பு செய்து நூலகத்தாரால் வெளியிடப்பட்டுள்ளது. இப்பதிப்புகள் செய்யுள் வடிவில் உள்ளவற்றின் கருத்துக்களை விளக்கியும், சோதிடக் குறிப்புக் களும், ஆராய்ச்சி விளக்கங்களும், வரைந்து, இன்னும் மற்ற அருமை பெருமை களையும் எடுத்துக்காட்டி, படித்தவர்களும் பாமரர்களும் உணருமாறு பதிப்பாகி வெளிவந்துள்ளன. அந்நூல் பற்றிய விவரங்கள் கீழே தரப் பட்டுள்ளன.

சப்தரிஷி நாடி — மேஷ லக்னம் :

பதிப்பாசிரியர்	;	பேராசிரியர் கே. நடேசன்
ஆண்டு	:	1951
விலை	:	ரூ. 20-00
பக்கங்கள்	:	I—XXII; 904

இந்நூலில் 78 ஜாதகங்களுக்கு ராசிக்கட்டம் கொடுத்து செய்யுளும் உரைவிளக்கமும் கொடுக்கப்பட்டுள்ளன. அவை ஒவ்வொன்றும் வெவ்வேறான கிரக நிலைகளைக் கொண்டுள்ளன. மேஷத்தை லக்னமாகக்கொண்ட ஜாதகர்களுடைய பாவ சக்கரங்களும், கிரக பேதா பேதங்களும் சீர்தூக்கிக்

காட்டப்பட்டு பண்டைக்கால சாஸ்திர விதிப்படி பலாபலன்கள் வரையப் பட்டுள்ளன. மேஷ லக்ன ஜாதக மூலச்சுவடியில் இரண்டாம் பாகம் என்ற தலைப்பில் மூன்று அனுபந்தங்கள் உள்ளன. அவற்றையும் முறையே மூன்று பகுதிகளாக இறுதியில் வெளியிடப்பட்டுள்ளது.

விருஷப லக்னம் :

பதிப்பாசிரியர்	:	பண்டிட் எஸ். தங்கவேல் நாடார்
ஆண்டு	:	1953
விலை	:	ரூ. 30-00
பக்கங்கள்	:	I—XXXVI; 1447

இப்பிரிவில் 121 ஜாதகங்களுக்கு விளக்கம் கூறப்பட்டுள்ளது. சோதிடக்கலையில் பயிற்சி பெற்றவர் மாத்திரமேயன்றி எல்லா மக்களும் படித்து உணர்ந்து கொள்ளவேண்டிய அரிய பல செய்திகள் கூறப்பட்டுள்ளன. இல்லை என இரப்போனை ஒன்றுமில்லையென கோபத்துடன் விரட்டுதல், பசியினால் வருந்துகின்ற குழந்தைக்குப் பால் வேண்ட இல்லை யென்பது போன்ற செயல்களால் ஏற்படும் தோஷங்களும், பரிகாரங்களும் கூறப்படு கின்றன. லக்னம் முதல் 12 இடங்களுக்குரிய வேறு பெயர்களின் பட்டியல், நவக்கிரகங்களின் உச்ச, நீச்ச, ஆட்சி ஸ்தானங்களின் பட்டியல், விருஷப லக்ன ஜாதகங்களில் வந்துள்ள கிரக நிலைகளின் அட்டவணை முதலியனவும் கொடுக்கப்பட்டுள்ளன.

மிதுன லக்னம் :

பதிப்பாசிரியர்	:	ஆர். வி. ராஜகோபால ஐயங்கார்
ஆண்டு	:	1954
விலை	:	ரூ. 36-00
பக்கங்கள்	:	I—LVII; 1050

இந்நூலில் 109 ஜாதகங்களுக்குப் பலா பலன்கள் கூறப்பட்டுள்ளன. இந்நூலுக்கு முன் வெளிவந்த மேஷ, விருஷப லக்னங்களுக்கும் மிதுன லக்னத் திற்கும் இண்டெக்ஸ் கொடுக்கப்பட்டுள்ளது. மேலும் நவக்கிரகங்களுக்கு உரிய வேறு பெயர்களும், நட்சத்திரங்களின் பிற பெயர்களும், நவக்கிரக காரகத்துவம், பாவ காரகத்துவம் முதலியனவற்றின் அட்டவணையும் தரப் பட்டுள்ளன.

கடக லக்னம் :

பதிப்பாசிரியர் : வித்துவான் வி. எஸ். சேஷாத்திரியாசார்யன் & சி. ஜி. ராஜன்
ஆண்டு : 1958
விலை : ரூ. 42-00
பக்கங்கள் : I—CLIII; 1267

இதில் 105 ஜாதகங்கள் கொடுக்கப்பட்டு விளக்கம் தரப்பட்டுள்ளது. சோதிட சாத்திரம் பற்றி விரிவான ஆங்கில, தமிழ் முன்னுரை 153 பக்க அளவில் பதிப்பாசிரியர்களால் எழுதப்பட்டுள்ளது. மேலும் ஜாதகங்களில் முக்கியமான ஆயுள் விஷயமாக விவாதம், களத்திர விஷயமாக விவாதம், சந்ததி விஷயமாக விவாதம், உடன் பிறந்தவர்கள் விஷயமாக விவாதம். யோக விஷயமாக விவாதம் என ஜாதகங்கள் தனித்தனியாக பிரித்து அட்டவணை கொடுக்கப்பட்டுள்ளது. ஜாதக சக்கரங்களின் விஷய அட்டவணை (Index) யையும் காணமுடிகிறது.

சிம்ம லக்னம் :

பதிப்பாசிரியர் : ஆர். வி. ராஜகோபால ஐயங்கார் & சி. ஜி. ராஜன்
ஆண்டு : 1956
விலை : ரூ. 27-00
பக்கங்கள் : I — XI; 2007

இதுவரை வெளிவந்த ஆறு தொகுதிகளில் இந்நூல் பெரிய தொகுதி. 140 ஜாதகங்களின் இராசிகட்ட அமைப்புடன் ஜாதக பலன்களை செய்யுளில் கூறி விளக்க உரையும் தந்து வெளியிடப்பட்டுள்ளது. சிறிய ஆங்கில முன்னுரையும் கொடுக்கப்பட்டுள்ளது.

கன்னியா லக்னம் :

பதிப்பாசிரியர் : சி. ஜி. ராஜன் & டி. சந்திரசேகர்
ஆண்டு : 1961
விலை : ரூ. 31-50
பக்கங்கள் : I — XXVI; 626

92 ஜாதகங்களுக்கு பலாபலன்கள் எழுதப்பட்டுள்ளன. விரிவான தமிழ் முன்னுரையை உள்ளடக்கி உள்ளது. ஜாதகர்களுக்கு ஏற்படக் கூடிய முக்கிய நிகழ்ச்சிகளான புத்ர தோஷம், களத்திர தோஷம், சகோதரதோஷம், ஏற்பட ஏதுவான தீச்செயல்கள், கிரக நிலைகள் பற்றியும் அவற்றிற்கான

சாந்திகளும் கூறப்பட்டுள்ளன சப்தரிஷி நாடியின் வியாக்கியானத்தில் உபயோகப்படுத்தப்பட்ட சோதிட சாத்திர நூல்களின் பட்டியல் மற்றும் ஜாதகர்களின் சக்கரங்களின் விவர அட்டவணையும் கொடுக்கப்பட்டுள்ளன.

நூற் சிறப்பு :

அறப்பளீசுவரர் சதகத்தில் 'சோதிடம் பொய்யாது' என்று கூறியிருப்பதை யாவரும் அறிவர். நமது வாழ்க்கையின் நிகழ்ச்சிகளை முக்காலத்திற்கும் ஏற்ப பொய்யா மொழிப் புலவர்களாகிய சப்த ரிஷிகளும், பார்வதி தேவிக்கு சம்பாஷணை வாயிலாக சோதிட சாத்திர நுட்பங்களைக் கொண்டு விளக்கிக் காட்டியுள்ளனர். மனித வாழ்வில் ஏற்படும் புண்ணிய பாவங்களின் உருவங்களைக் காட்டி இருப்பது படிக்கப் படிக்க பரவசமடையச் செய்கின்றது.

வானத்தில் இருக்கும் சப்தரிஷி மண்டலத்தில் உள்ள ரிஷிகளின் பெயர்களுக்கும் மகாபாரதத்தில் சொல்லப்பட்டுள்ள சப்தரிஷிகளின் பெயர்களுக்கும், மந்திர சாஸ்திரத்தில் சொல்லப்பட்ட சப்த ரிஷிகளுக்கும், இந்நூலில் கூறப்படுகின்ற சப்தரிஷிகளின் பெயர்களுக்கும் சில வேறுபாடுகள் இருக்கின்றன. சாஸ்திரங்களெல்லாவற்றிலும் ஏழு என்ற எண்ணுக்கு முக்கியத்துவம் கொடுக்கப்பெற்றுள்ளது யாவருமறிந்ததே. உதாரணமாக சப்த மேகங்கள் சப்த யோகங்கள், சப்த சமுத்திரங்கள், சப்த பர்வதங்கள் சப்த ரிஷிகள் என்று கூறப்பட்டுள்ளன.

சோதிட சாத்திர வாயிலாக நாம் அறிந்து கொள்வது முக்கால்வாசி எதிர்கால வாழ்க்கையைப் பற்றிய பிரச்னைகள்தாம். எடுத்துக்காட்டாக ஒருவனுக்கு எப்பொழுது எந்த இடத்தில் திருமணம் நடக்கும்; எத்தகைய மனைவி வாய்ப்பாள்; ஏன் ஒருவனுக்குப் புத்திரனே பிறக்கவில்லை; ஒருவனுடைய வாழ்வில் ஏற்படும் சிக்கல்கள் யாவை; எப்படிப் பலவித கண்டங்களிலிருந்து தப்புவது; ஒருவனைப் பிடித்தாட்டும் ஊழ்வினை யாது; அதை நிவர்த்தி செய்யும் கர்ம சாந்திகள் யாவை; ஒருவனுக்கு எத்தகைய ஜீவனம் ஏற்படும்; ஜாதகத்தில் ஜீவன ஸ்தானங்களும் யோக பாவங்களும் எவ்விதமிருக்கின்றன: காலம் ஒருவனுக்கு நல்லதாகவும் மற்றொருவனுக்குக் கெட்டதாகவும் ஏன் இருக்கிறது? ஒரு பாவமுமறியாதவர்கள் கஷ்டப்படுவதன் காரணங்கள் எவை? என்று இவை போன்ற நூற்றுக்கணக்கான விதவிதமான கேள்விகளுக்குச் சோதிட சாத்திரத்தைக்கொண்டு காலச் சக்ர நிர்ணயங்கள் செய்து, தசாபுத்தி விவரங்களைக் கூறி, ஆட்சேபனை சமாதானங்களுடன் உரிய பலாபலன்களை நிச்சய புத்தியுடன் கிரக நிலைகளின் வேறுபாடுகளை ஆராய்ந்து கூறும் அரிய பெரிய நூல் இந்த சப்தரிஷி நாடி நூலாகும்.

வெள்ளம் வரும் முன் அணையிடுதல் போல் நாளை வரும் ஜென்மத்திற்கு உடனுக்குடன் கடவுளைத் தியானித்துப் பாவ விமோசனத்தையடைந்து

புண்ணிய கர்மாக்களைச் செய்து பரமபதத்தையடைய வேண்டிய மார்க்கங்களையும், விதிவசத்தால் ஏற்பட்ட தீமைகளை நம் செயலாலேயே போக்கிக் கொள்ளும் வழிகளையும் இந்நூல் ஆங்காங்கு எடுத்துப் போதிக்கின்ற விதியை மதியினால் வெல்லலாம் என்றும், கிரகக் கோளாறுகளுக்கு நல்ல ஒழுக்கம் விழுப்பம் தரும் என்பதையும், போதாத கால ஸ்திதிகளை எவ்வாறு நன்குணர வேண்டுமென்றும் நவக்கிரகங்களின் போக்கை அறிந்து அதன்படி நடக்க வேண்டுமென்பதையும் இந்த நாடி நூற்கள் ஒரு வழிகாட்டியாயிருந்து எச்சரிக்கை செய்கிறது.

இத்துடன் இந்நூற்களில் வெளியிடப்பட்டுள்ள 1. ராசிகளின் வேறு பெயர்கள். 2. லக்னங்களின் மறு பெயர்கள். 3. நவக்கிரகங்களுடைய மறு பெயர்கள் ஆகிய மூன்று இணைப்புகளையும் தந்துள்ளேன். சோதிடர்களை நாடி இன்றும் பலர் "நாடி சோதிடம்" பார்த்து வருகின்றனர். அவர்கள் எழுதிக் கொடுக்கும் கையெழுத்துப் படிகளில் இப் பரிபாஷைகளைக் காணலாம். அவர்களுக்கும், சோதிடக் கலையின் நுட்பங்கள் பற்றி ஆய்வோருக்கும் இவ்விணைப்புகள் பயனுள்ளதாக விருக்குமெனக்கருதி இணைத்துள்ளேன்.

குறிப்பு :

இக் கட்டுரையில் விவரிக்கப்பட்டுள்ள சப்தரிஷி நாடி மேஷம் முதல் கன்னி வரை உள்ள 6 நூற் தொகுதிகள் தஞ்சை சரசுவதி மகால் நூலகத்தின் புத்தகப் பிரிவில் பயன்பாட்டிற்கு உள்ளன. (வரிசை எண் T. 994; 1104; 1361; 1672; 1676; 3011).

இணைப்பு — I

மேஷம் முதலிய பன்னிரண்டு ராசிகளின் வேறு பெயர்களின் பட்டியல்

மேஷம் : வருடை, மை, ஆடு, தகர், மறி, கொச்சை, கொண்டல்.

விருஷபம் : மால், விடை, பாறல், புல்லம், சே, நந்தி, மா, பசு, பாண்டில், குண்டை, விடை, ஏறு, மாடு.

மிதுனம் : சயமகள், தண்டு, விழவு, இரட்டை, பாடவன், பாடலை, யாழ், வீணை, புது மகளிர்.

கடகம் : மதி, நள்ளி, குளிர், கள்வன், சேக்கை, அலவன், நண்டு, கர்க்கடகம், வண்டி, நண்டுத்தெருக்கால், பறப்பன.

சிம்மம் : அரி, ஆளி, அரிமா, புலி, சீயம், சிம்மம் (மற்றுமுள்ள புலி, சிங்கத்தின் பெயரனைத்துங் கொள்க).

கன்னி : பெண், மாதை (மற்றும் பெண் பொதுப் பெயரனைத்தும் உரியவாம்).

துலாம் : நிறைகோல், துலாக்கோல், துலாம், துலை, கோல், கட்டளை, தராசு, தூக்கு, தூக்கம்.

விருச்சிகம் : பறப்பன், தேள், தெருக்கால், விருச்சிகம்.

தனுசு : காண்டிபம், கொடுமரம், துரோணம், சாபம், சிலை, வில், மேரு (மற்றும் வில்லின் பெயரெல்லாம் கூறுவர்).

மகரம் : கலை, சுறா, தை, மகர மீன், மான்.

கும்பம் : குடம், குடங்கர், சால், சாடி, கரீரம்.

மீனம் : சலசம், சலசரம், அயிரை, கயல், சேல், மச்சம்.

இணைப்பு — II

மேஷம் முதல் மீனம் வரை பன்னிரண்டு இலக்னங்களுக்கும் கையாளப் பட்டிருக்கும் மறுபெயர்களின் அட்டவணை.

மேடம் : ஆடு, கொச்சை, கொண்டல், தகர், மேழகம், மொத்தை, வருடை.

இடபம் : குண்டை, எருது, நரை, புல்லம், நந்தி, வெண்மை.

மிதுனம் : இரட்டை, ஆண்-பெண், சபைமகள், பாடவன், பாடவள், பாடவை.

கடகம் : அலவன், கங்கணம், கர்க்கடகம், கிம்புரி, கைவளை, நண்டு, நள்ளி.

சிம்மம் : அரி, சிங்கம், சீயம், புலி, பாரி.

கன்னி : குமரி, சேடிகை, தவப்பெண், துர்க்கை, நாரி, பெண்.

துலாம் : ஏற்ற மரம், கோல், சீர், துளை, துலை, நிறை, கோல்.

விருட்சிகம் : சாரணை, தேள், பறப்பன், புழு, நண்டுத்தெருக்கால், மயிர்க்குட்டி.

தனுசு : காண்டீபம், சிலை, தனூர் ராசி, மேரு, வியாழ ராசி, வில்.

மகரம் : சுறாமீன், தை மாசம், மான், முதலை.

கும்பம் : குடம், கும்பக்கலசம், குவியல், மாசி, சாடி.

மீனம் : சேல், பங்குனி, பார்க்குனீயம், மீன்.

இணைப்பு — III

நவக்கிரங்களுடைய மறுபெயர்களின் அட்டவணை

சூரியன் : அகர்மணி, அகர் நாதன், அகர்ப்பதி, அசிரன், அரி, அலரி, இரவி, ஆதித்தன், கடவுள், கதிர், எல்லை, தினகரன். நர்மடன், ஞாயிறு, நிசாரி, பகலவன், பசதன், பதுமபாணி, பரிதி, பரியாறுடையான், பருதி, பற்கன், மார்த்தாண்டன், மித்திரன், பங்கயன், புரவி, வியாழ சிநேகன், பொன்கதிர்.

சந்திரன் : அரி, அறிவு, உடுக்கோள், உடுபதி, அத்திரி, கலை, கற்கடக விராசி, அந்திகேசன், உடுவேந்து, தீகன், நிசாபதி, நாண்மதி, நிசார்த்துனன், நிலவு, மதி, பபசி, முசலி.

செவ்வாய் : அங்காரகன், ஆரல், ஆரம், அதிதி, கோணம், சேய், குருதி, சிவந்த வாய், பூமகன், புகழ், போராறு, பாரி, மகரவுச்சன், மங்கலன், மைமீன், நிலமகன்.

புதன் : அறிஞன், அருணன், தூதுவன், சூரியன், கணக்கன், சாமன், சந்திரன் புதல்வன், தேவன், மதிமகன், மந்திரி, மால், பருதி, சௌமியன், புலவன், மாலவன்.

வியாழம் : குரு, ஞானி, இரணியன், தேவகுரு, பீதகன்; பொன், பொன்னவன், பகவன், பிருகஸ்பதி, மந்திரி, மாதவன், மறை அரசன், வியாழம்.

சுக்கிரன் : அசுரகுரு, அசுர மந்திரி, ஒரு கண்ணுளான், கவிமகன், தீ. தயித்திய மந்திரி, நற்கோள், நீர், நதிகோள், சல்லியன், சுங்கன், பார்க்கவன், பிருகுசுதன், புயல், பிரசுரன், மழைக்கதிபதி, மழைக்கோன், வெள்ளி.

சனி : அந்தகன், அருணன், கதிர்மகன், கரியவன், கலி, கோலம், துன்பம், நொண்டி, நீலவசனம், நீலவண்ணன், நீலவாசன், பங்கு, முதுமகன், மைந்தன், மந்தன், காரி, கெட்டவன், கோணம், விதி

இராகு : அசுரன், கருங்கோள், கரும்பாம்பு, நீசக்கிரகம், நீடுதருங் கோள், பணி, நாகம், மந்தரகயிறு.

கேது : அசுரன், அடையாளம், இரணியன், ஞானி, செம்பாம்பு, நீசக்கிரகம், நோய், பரியாறுடையான், வெளிச்சம்,

கள்ளப்புலியூர் பர்வத சஞ்சீவி அய்யர் இயற்றிய

சுந்தரர் சரித்திரச் சுருக்க அகவல்

திருமதி. **ச. திலகம்,** பி. லிட்.,
தமிழ்ப்பண்டிதர்,
சரசுவதி மகால் நூலகம்.

செந்தமிழ் உலகிற்குத் தேவாரக் கொடையினை வழங்கிய அப்பர், சம்பந்தர், சுந்தரர் எனும் மூவருள் சுந்தரமூர்த்தி நாயனாரின் திருச்சரிதத்தை–வாழ்க்கை வரலாற்றுச் சிறப்புகளை அகவற்பாவில் எடுத்துரைக்கும் விழுமிய நோக்கில் மலர்ந்துள்ளது இப்படைப்பாகும்.

கள்ளப்புலியூர் பர்வத சஞ்சீவி அய்யர் எனும் புலவர்மணியால் புனையப்பெற்ற இச்சுந்தரர் சரித்திரச் சுருக்க அகவல், இந்நூலகத் தமிழ்த் துறையில் இடம்பெற்றுள்ள 1201ஆம் எண்ணுள்ள ஓலைச்சுவடியில் இடம் பெற்றுள்ளது.

1201ஆம் எண்ணுள்ள சுவடியில் சுந்தரர் சரித்திரச் சுருக்க அகவல் இரண்டு வகையான பிரதிகளைக் கொண்டுள்ளது. பெரும்பாலான அடிகளும் சீர்களும் இரு பிரதியிலும் ஒத்துக் காணப்படினும், ஆங்காங்கு சிற்சில அடிகளும் சீர்களும் வேறுபட்டுக் காணப்படுகின்றன. இவ்வேறுபாடுகள் "பாடபேதங்களாகப்" பக்கந்தோறும் அடிக்குறிப்பாகச் சுட்டப்படும் நிலையினைக் கடந்து, பயில்வதால் இரு பிரதிகளுமே இங்கு அடுத்தடுத்து (தனித்தனியே) இடம்பெறுகின்றன.

முதலில் எழுதிய பிரதியினை அழகுபடுத்தும் விதமாக அடுத்த பிரதியினைச் சிற்சில சீர், அடி, வேறுபாட்டுடன் புலவர் மாற்றியமைத்திருக்கலாம். இரு பிரதிகளையும் ஒருங்கே கண்ணுறும் இலக்கிய அன்பர்கள், ஆய்வாளர்கள் புலவரின் படைப்பாக்கத்திறன், பாடவேறுபாடுகள் முதலியவற்றைச் சிந்திக்கவும், சுவைக்கவும் வாய்ப்பாக இப்பிரதிகள் இங்குப் பதிப்பிக்கப் படுகின்றன.

சுந்தரர் சரித்திரச் சுருக்க அகவல்

திருவளர் கயிலைச் சிவனடி யவருள்
இருக்கும் ஆலால சுந்தரர் என்பவர்
சிவனுக் கணியத் தேமலர் கொய்ய
நவையில் நந்த வனத்தில் சென்று
அம்பிகை சகியாம் அநிந்தை கமலினி
என்று புகலும் இருமா தைக்கண்(டு)
அன்பொடு மோகித் தப்பின் மனதை
நன்றாய்த் திருப்பி நன்மலர் கொய்து
பரம சிவன்முன் பண்புடன் போக
பரம சிவன், அவர் பாவையர் மீது
மோகங் கொண்டதை முன்னே அறிந்து
ஆலால சுந்தர ரானை நோக்கிநீ
தென்னாட் டிற்போய்த் தெரிவையர் மோகம்
நன்றாய்த் தீர்த்து நம்மிடம் வருவாய்
என்றரன் புகல இனியசுந் தரரும்
கொன்றை முடியனைக் கும்பிட் டெழுந்து
இருகை கூப்பிநின்(று) எனைஆள் பவனே!
குன்றை வில்லாய்க் கொண்டநற் சிவமே!
அடியேன் நல்ல தென்னா(டு) அடைந்து
வடிவ முள்ளநல் வனிதையர் மயலில்
அகப்படு நாள்நீர் அங்கே வந்தெனைச்
சுகப்ப டும்படி யாட்கொள வேணுமென் று
சொல்லஅப் போது சோதிச் சிவனும்
நல்லதப் படியே நாம்செய் வோமென்(று)
அறைய ஆலால சுந்தர வர்தான்
திறமுள நல்ல தென்னா டதனில்
திருநாவ லூர்வாழ் சிவமறை யோரில்
மருவு சடையனார் மனைவி வயிற்றில்
விருப்பத் துடனே கருப்பத் தடைந்து
உதிக்க அவர்பிதா உச்சா கமதாய்
இதமுள நம்பி ஆரூ ரனெனத்
திருநா மந்தனைச் செவையாய் வைத்துப்
பரிவுடன் கல்விப் பழக்கஞ் செய்து

முந்நூ லினைமறை முறையே தரித்து
பொன்னூ ரொத்த புத்தூ ரிற்போய்க்
கன்னிகை யமைத்து நன்மை தினத்தில்
திருமண மதனைச் செய்யத் தொடங்கித்
திருமணக் கோலஞ் செய்தனர் அப்போ(து)
சிவன்தான் முன்னஞ் செப்பின படியே
நவையில் லாத நற்சுந் தரரை
ஆட்கொள வேணுமென்(று) அகத்தில் நினைத்து
வாட்ட மடைந்த வடிவின ராயும்
விருத்த மறையவர் வேடங் கொண்டு
அடிமை யோலையை அங்கைப் பிடித்து
முன்னர் உரைத்த மொய்புத் தூரில்
நன்றாய்ச் சென்று நற்கல் யாணப்
பந்தலிற் சென்று பலமுடன் நின்று
அங்கே யிருந்த அனைவரைப் பார்த்து
இந்தச் சுந்தரன் எனக்கடி மையெனப்
பந்தமாய் வாதம் பண்ணிஓ லைதனைக்
காட்டினர் அப்போ கனசுந் தரர்போய்க்
காட்டின ஓலையைக் கையாற் பிடுங்கிக்
கிழிக்க விருத்தர் கேவலஞ் சினந்து
இழிவிலங் கிருந்த யாரையுங் கொண்டு
திருவெண்ணெய் நல்லூர் சென்றவ் விடத்தில்
இருந்தோரை யெல்லாம் ஏகமாய்க் கூட்டி
வாதித் தவர்களை வளமுடன் கொண்டு
ஓதுங் கோவிலின் உள்ளே புகுந்து
சிவனுரு வாகி தேவிதன் னுடனே
இடபத் தின்மே லேறியுன் வந்து
வடிவுள சுந்தரன் வதனம் பார்த்துக்
கலையின் முன்னே கழன்ற மொழிகளைப்
பழுதில் லாமற் பாந்தமாய்ச் சொல்ல
நற்சுந் தரர்க்குமுன் ஞானமுண் டாகிப்
பற்பல பதிகம் பாடிப் பணிந்து
பன்னும் அநேக தலம்போய்ப் பணிந்து
பின்னா ரூரிற் பிரியமாய் வந்து
பரவை வேசியைப் பார்த்துமோ கித்து
அரனை அவள்தன் இடத்தில் அனுப்பித்
தனைமணஞ் செய்யச் சம்மத மாக்கி
அரனுத் தரவால் அவளை மணந்து

திருத்தொண் டத்தொகை செவ்வையாய்ப் பாடிக்
குண்டையூர் கிழவர் கொடுத்தநெல் வாங்கித்
திருப்புக லூர்போய்ச் சிவனைப் பணிந்து
செங்கற் பொன்னைச் செங்கையிற் கொண்டு
சங்கையில் விருத்த சைல மடைந்து
சிவனைப் பணிந்துச் சிவனார் கொடுத்த
நவையில் பொன்னை நதியில் போட்டு
அதைவிட் டநேக தலங்கள் பணிந்து
நிதமும் வண்மை நிறைந்து மிகுந்த
திருவா ரூரிற் சென்று குளத்தில்
பொன்பரிகா செடுத்தப் பரனைக் களித்து
பருவட நாட்டில் பலதலம் பணிந்து
திருவொற்றி யூர்போய்ச் சிவனைப் பணிந்து
சங்கிலி மாதைக் கண்டு யோசித்து
அரனை அவள்தன் இடத்தில் அனுப்பித்
தனைமணஞ் செய்யச் சம்மதஞ் செய்து
மகிழென் றறையும் மரத்தின் கீழே
உனைப்பிரி யேனென் றுரைத்தே யானை
திருமண முடித்துச் சிலநாள் பொறுத்துத்
திருவா ரூர்க்குச் செல்ல அவர்தன்
இருவிழி மறைய இஷ்டத் துடனே
ஓணகன் னவர்த றுயர்நற் றையில்
கொம்பு கொடுத்த கோலைப் பிடித்து
உள்ளப் படிக்கே மெள்ள நடந்து
வழியி லுளசில சிவனை வணங்கிக்
காஞ்சியிற் போய்ஏ காம்பர நாதனை
வாஞ்சையாய்ப் பணிந்து வாமகண் பெற்றுத்
திருவா ரூர்போய்ச் சிவனைப் பணிந்து
வலக்கண் பெற்று வலியுள சிவனைப்
பரவை கொண்ட கோபத்தை யகற்ற
பரவை யிடத்தில் சிவனை யனுப்பிக்
கோப மகற்றிக் கொண்ட பின்னர்
பரம சிவனால் பரவையைக் கூடி
களிப்பொடு முன்போற் கலந்தி ருந்து
திருப்பெரு மங்கலஞ் சென்(று)ஏ யர்கோன்
கலிக்கா மற்குயிர் கடவுளா றந்து
திருப்புன் கூர்போய்ச் சிவநா ளிருந்து
திருவா ரூரிற் றிரும்பி வந்து

கொடுங்கோ ளூரிற் கோணா தரசு
செய்தே யிருந்த சேரமா னவனைச்
சேர்ந்தி ருந்தபின் சிலநாள் பொறுத்து
அவனளித் திட்ட அரும்பொருள் கொண்டு
புகலூ முருகன் பூண்டி யருகில்
அணுகும் போதினி லாதிப் பரமன்
விட்ட பூதங்கள் வேடர் வடிவாய்க்
காட்டில் வந்து கனசுந் தரரின்
பொருளைப் பறிக்க(வ)ப் போது சுந்தரர்
முருகன் பூண்டியின் முக்கணன் கோவில்
சென்று பணிந்து திருக்கவி பாடி
நன்றா மப்பொருள் நல்கப் பெற்றுத்
திருவா ரூர்போய்ச் சிலநா ளிருந்து
சேர மானிடஞ் செல்ல வெழுந்து
இடையவ நாசி எனுமூ ரிற்போய்த்
தடமதில் முதலை உண்ட தனயனை
அழைப்பித் தளித்து அதைவிட் டகன்று
இழிவிற் கொடுங்கோ ளூரினி லேகிச்
சேர மானுடன் சிலநா ளிருந்து
திருவாஞ் சைக்களம் சென்று சிவனைப்
பெருவாஞ் சையுடன் பேணிப் பணிந்து
திருவடி யதனிற் சேர்த்திடு வென்று
பரமனைப் பணிந்து பதிகம் பாட
அதனைக் கயிலை அரனு மறிந்து
கணமொடு வெள்ளைக் கரியை யனுப்பச்
சுந்தர மூர்த்தி சுருக்கா யந்த
வெள்ளை யானைமேல் மெள்ளவே யேறிச்
சேர மானுடன் சென்று கயிலை
பேருள சிவனைப் பிழையிற் பணிந்து
பண்டு போலப் படிந்திருந் தனரே.

சுந்தரர் சரித்திரச் சருக்கம்

நிலைமண்டில ஆசிரியப்பா

திருவளர் கயிலைச் சிவனடி யாரில்
உறையா லால சுந்தரன் முன்போல்*
ஒருநா ளிரவி யுதயத் தினிலே
சிவனுக் கணியத் தேமலர் கொய்ய
நவையில் நந்த வனத்தில் சென்று
அம்பிகை சகியா மநிந்ந்தை கமலினி
என்று புகரும் இருமா தரைக்கண்(டு)
அன்பொடு மோகித் தப்பின் மனதை
நன்று திருப்பி நன்மலர் கொய்து
பரம சிவன்முன் பண்பொடு போக
பரம சிவனவன் பாவையர் மீது
மோகங் கொண்டதை முன்னே யறிந்து
அடிய னான ஆலசுந் தரனின்
திடமுக மதனைச் செவ்வையாய் நோக்கிச்
சுந்தர னேநீ சுந்தர முள்ள
மங்கையர் மீது மனது வைத்தான்
தென்னா டதில்போய்த் தெரிவையர் மோகம்
தன்றாய்த் தீர்த்து நமதிடம் நிவா
என்றே புகல எழில்சுந் தரனும்
அச்சம் அதிக மாகவே கொண்டு
மங்கையர் மீது மனம்வைத் ததைநாம்
சிவனுக் குத்தான் தெரிந்ததே யென்று
எண்ணி எண்ணியே தன்னிதயத் தினிலே
செங்கை கூப்பிச் செவ்வைய தாகக்
கொன்றை வேணியைக் கும்பிட் டெழுந்து
இருகை கூப்பி எனைஆள் பவனே
குன்றை வில்லாய்க் கொண்ட சிவனே
மழுமான் ஏந்து மாகேச் வரனே

---

* இருந்தநல் லாலால சுந்தரனார் முன்போல்

பழுதில் அடியரைப் பாலித் தவனே
வானவர் வந்து வணங்கும் பதனே
தேனுறை கொன்றை தினமணி பவனே
அடியேன் நல்ல தென்னா டதில்போய்
வடிவ முள்ள வனிதையர் மயலில்
அகப்படு நாள்நீர் அங்கே வந்தெனைச்
சுகப்பட வேயாட் கொள வேணுமெனச்
சொல்ல, அந்தச் சோதிச் சிவனும்,
"நல்ல(து) அப்படி நாஞ்செய் வோம்"என
அறையவே நல்ல வாலால சுந்தரனும்
திறமுள் செழிய தென்னா டதனில்
திருநாவ லூரிற் சிவமறை யோரில்
மருவு சடையனார் மனைவி வயிற்றில்
விருப்ப மாகக் கருப்ப மடைந்து
உதிக்க அவர்பிதா உச்சா கத்தோ(டு)
இதமுள நம்பி ஆரூ ரனெனத்
திருநா மத்தைச் செவையாய் வைத்துப்
பரிவொடு கல்வி பலவாய் ஓதி
முந்நூ லைமறை முறையே தரித்துப்
பொன்னூ ரொத்த (அமராவதிப் பட்டணம்) புத்தூ ரிற்போய்க்
கன்னிகை பேசி நன்மை தினத்தில்
திருமணம் அதனைச் செய்யத் தொடங்கித்
திருமணக் கோலஞ் செய்யும் போதில்
சிவனும் முன்னஞ் செப்பின படிதான்
நவையில் லாத நற்சுந் தரரை
ஆட்கொள எண்ணி அக்கண மதிலே
வாட்ட மடைந்த வடிவின ராகி
விருத்த மறையோன் வேடங் கொண்டு
பருத்ததன் கையிற் பரிவொடு நல்ல
அடிமை ஓலையை அங்குப் பிடித்து
முன்னம் உரைத்த மொய்புத் தூரில்
நன்றா யேகி நற்கல் யாணப்
பந்தலி லேகிப் பலமுடன் நின்ற
அங்குள மறையோ ரானன நோக்கி
இந்தச் சுந்தரன் எனக்கடி மையெனப்
பந்தமாய் வாதம் பண்ணிஓ லைதனைக்

காட்டினர் அந்தக் கணமே சுந்தரர்
கோட்டமில் அதிகக் கோபங் கொண்டு
எழுந்து பரமன் எதிரில் வந்து
பழுதில் லா,சின மொழிகள் பகர்ந்து
காட்டின ஓலையைக் கையாற் பிடுங்கிக்
கிழிக்க விருத்தர் கேவலஞ் சினந்து
இழிவில் அங்குள யாரையும் அப்போ
இட்டுக் கொண்டு சட்டென அகன்று
புத்தூர் விட்டுப் போய்ந டந்து
திருவெண் ணெய்நல் லூர்சென் றங்கே
இருந்த மனிதர் யாவுங் கூட்டி
வாதித்(து) அழைத்துக் கொண்டு மாசில்லா
ஓதுங் கோவிலின் உள்ளே நுழையாச்
சிவனுரு கொண்டு தேவியின் உடனே
இடபத் தின்மீ தேறிமுன் வந்து
வடிவுள சுந்தரர் வதனம் பார்த்துக்
கைலையில் தான்முன் கழறின மொழியை
நிலையுடன் அப்போ நிசமாய்ப் பகர
நற்சுந் தரர்க்கு நலமாய் முன்னம்
பற்றிய குணமது பலவுண் டாகிப்
பிழையில் பித்தா பிறைசூ டியெனப்
பழுதில் மொழியைப் பரிவாய் முதலில்
வைத்தன் புடனே வண்மை யுடனே
பற்பல பதிகம் பாடிப் பணிந்து
பண்ணும் அநேக தலம்போய்ப் பணியா,
பின்னா ரூரிற் பிரியமாய் வந்து
பரம சிவன்தன் பாதம் பணியாத்
திறமோ டிருக்கச் சிலநாள் முன்னே
முன்ன முரைத்த முக்கணன் தேவிக்(கு)
அன்புள சகியாம் அநிந்தையப் பதியில்
உரிய வேசியின் உதரத் துதித்துப்
பாவை யெனப்பேர் பண்பொடு பெற்றுப்
பரமன் கோவிலிற் பரிவொடு வந்து
பரத நாட்டியம் பண்பொடு செய்தே
நிதமுங் கோவில் தனக்கே நிலையாய்
இதமுட னேசென்(று) இனிதோ டிருக்கச்
சுந்தர ரவனைச் சுகமொடு நோக்கிச்
சிந்தையில் அதிக சிற்றின் பத்தைப்

பரிவாய் வைத்துப் பார்த்து மோகித்து
அரனை அவள்தன் இடத்தில் அனுப்பித்
தமனமணஞ் செய்யச் சம்மத மாக்கி
அரனுத் தரவால் அவளை மணந்து
திருத்தொண் டத்தொகை செவையாய்ப் பாடிக்
குண்டையூர்க் கிழவர் கொடுத்தநெல் வாங்கித்
திருவா ரூரை விட்டு நடந்து
திருப்புக லூர்போய்ச் சிவனைப் பணிந்து
செங்கற் பொன்னைச் சங்கையிற் கொண்டு
சங்கையில் விருத்த சைலம் அடைந்து
சிவனைப் பணிந்துஅச் சிவனார் தந்த
நவையில் பொன்னை நதியில் போட்டு
அதைவிட் டதிக சிவனூர் அணுகி
நதியணி சிவனை நன்றாய் வணங்கி
நிதமும் வண்மை நிறைந்து மிகுந்த
திருவா ரூரிற் சென்று குளத்தில்
பொன்,பரிகா செடுத்தப் பரவைக் கீந்து
ஆரூ ரதனை அகன்று நடந்து
பருவட நாட்டில் பலதல மேகி
அரனை வணங்கி அன்பொடு பாடி
ஒண்திரு வொற்றி யூர்போய்ச் சிவனை
அண்டி, பணிந்தே அவ்விட மிருக்க
அம்பிகை சகியா முன்னம் உரைத்த
வம்பில் லாத கமலினி மாது
நாயி றெனப்பேர் நவிலும் பதியில்
தூயவே ளாளர் தொன்மர பினிலே
நன்றாய் உதித்து நன்மைச் சங்கிலி
என்று திருப்பேர் எய்தித் தன்னுட
தந்தை தாயினைச் சரணஞ் செய்து
பந்த மகற்றும் பரம னிருக்கும்
நற்றிரு வொற்றி யூரினி லேநான்
பத்தி யுடன்போய்ச் சிவனைப் பணிந்து
இருக்கும் படியே எனக்குத் தரவு
தரும்படி யோதிச் சங்கிலி அவள்தன்
தந்தை தாய்அவர் சம்மத மாகப்
பந்தம் அகற்றும் சங்கிலி மாது
தந்தை தாய்அவர் தம்மொழிப் படியே
சிந்தனை யில்லாத் திருவொற் றிப்பதி

அதனிற் சென்று அம்மலர் மாலை
நிதமுங் கட்டி நின்மல னுக்கு
அணிந்திட வேதந் தன்பாய்த் தாழ்ந்து
பூவில் யாரும் புகல்வதற் கரிய
கோவில் தனிலே குடியா யிருந்தாள்
சுந்தர ரவளைச் சுகமுடன்(மொடு) நோக்கி
முன்சொன் னப்படி மோகம தாகி
அரனை வணங்கி, "அரனே! இவளை
அடியேற் குமணம் அன்பாய்ச் செயும்" என்(று)
அறைந்து சிவனை அவள்தன் இடத்தில்
திறமாய்த் தூது செல்ல அனுப்பித்
தனைமணஞ் செய்யச் சம்மத மாக்கி
மனமொடு மகிழ மரத்தின் கீழே
உனைப்பிரி யேனென்(று) உறுதிய தாக
நினைவொடு சத்திய நிலையாய்ச் செய்து
திருமணம் முடித்துச் சிலநாள் பின்பு
திருவா ரூரிற் சிவனுக் குச்செயும்
திருவி ழாத்தினஞ் சேர வருவதை
மனதி லறிந்து மறுநா ளதனில்
திருவா ரூர்க்குச் செல்ல நினைத்து
மணமது செய்த மங்கை சங்கிலி
தன்னோ டுறைபா தப்படி யெவரும்தான்
அறியா தபடி அவ்வூர் விட்டுத்
திருவா ரூர்க்குச் செல்ல அவர்தன்
இருவிழி யும்மறைந் திருளைத் தரவே
பின்பவ ரொருவன் பிழையிற் கையில்
கொம்பு கொடுத்தக் கொம்பைப் பிடித்து
உள்ள படிக்கே மெள்ள நடந்து
வழிகளி லுள்ள சிவனை வணங்கி
காஞ்சியில் போய்ஏ காம்பர சிவனை
வாஞ்சை பணிந்து வாமகண் பெற்றுத்
திருவா ரூர்போய்ச் சிவனைப் பணிந்து
வலவிழி பெற்று வடிவுள பரவை
மனையினில் ஏகி மாதவ ளுடனே
பேசிட வேஅவள் பேசா ததனைத்
தெரிந்து தன்மேல் சினமா கினளென்(று)
அறிந்து மனதில் அக்கண மதிலே

கோயி லதனில் குறுகிச் சிவனைப்
பணிந்து நின்று, "பரிவொடு சிவனே!
பரவை கொண்ட கோப மகற்றி
என்னொடு முன்போல் இருத்தி வை!" என்(று)
அறைந்து சிவனை அன்பொடு தாழ்ந்து
பரவை கொண்ட கோப மகற்றப்
பரவை மனைக்குப் பரனை அனுப்பி
கோப மகற்றிக் கொண்டபின் அந்தப்
பாவை யுடன்மிகப் பரிவொடு கூடிச்
சிலநாள் அங்குச் சேர்ந்து பின்பு
நலமாய் அந்த நற்பதி விட்டுத்
திருப்பெரு மங்கலஞ் சென்(று)ஏ யர்கோன்
கலிக்கா மற்கு களவுயிர் தந்து
திருப்புன் கூர்போய்ச் சிலநா ளிருந்து
திருவா ரூரிற் றிரும்பி வந்து
கொடுங்கோ ளூரிற் கோணா தரசு
செய்தி ருந்தநற் சேரமா னவனைச்
சேர்ந்தி ருந்து சிலநாள் பின்பு
அவன ளித்தநல் அரும்பொருள் கொண்டு
செவையுடன் அந்தத் திண்ணகர் விட்டுத்
திருவா ரூர்க்குச் செல்ல நடந்து
புகழுள முருகன் பூண்டி யருகினில்
அணுகும் போதினில் ஆதிப் பரமன்
அனுப்பிய பலவாய் அம்பூ தங்கள்
வேடர் வடிவாய்க் காடதில் வந்து
கனசுந் தரரின் கையினி லுள்ள
பொருளைப் பறிக்கஅப் போது சுந்தரர்
முருகன் பூண்டியின் முக்கணன் கோவில்*
சென்று பணிந்து திருக்கவி பாடி
நன்றாய் அப்பொருள் நல்கப் பெற்றுத்
திருவா ரூர்போய்ச் சிலநாள் இருந்து
கொடுங்கோ ளூரிற் கோணா தரசு
திடமுடன் நன்றாய்ச் செய்திடு நல்ல

---

* 'எதிரில்' எனக் 'கோவில்' எனுஞ்சொல் மேல் எழுதப்பட்டுள்ளது.

சேர மானிடஞ் செல்ல எழுந்து
இடைஅவ நாசி எனும்ஊ ரிற்போய்
தடமதில் முதலை உண்ட தனயனை
அழைப்பித் தேஅளித் ததைவிட் டகன்று
இழிவில் கொடுங்கோ ளூரினி லேகிச்
சேர மானுடன் சிலநாள் இருந்து
அவ்வூ ரதனை அன்பொடு விட்டுத்
திருவாஞ் சைக்களஞ் சென்று சிவனைப்
பெருவாஞ் சையொடு பேணி வணங்கித்
திருவடி தனிலே சேர்த்திடு வென்று
பரம சிவன்றன் பதமலர் தாழ்ந்து
பரிவொடு நற்றிருப் பதிகம் பாட
அதனைக் கயிலை அரனும் அறிந்து
கணமொடு* வெள்ளைக் கரியை அனுப்பச்
சுந்தர மூர்த்தி சுருக்கினில் அந்த
வெள்ளை யானைமேல் மெள்ளவே ஏறி
சேர மானுடன் சென்று கயிலை
சென்று பரம சிவனை வணங்கி
உரமாய் முன்போல் ஒளிமிக வுடைய
அருவா லால சுந்தர ராகத்
திறமாய் முன்போல் சேர்ந்திருந் தாரே.

---

* 'கணமொடு' எனும் சொல்லின்மேல் 'சிவகணம்' என எழுதப்பட்டுள்ளது.

ஔவையார் இயற்றிய மூதுரை

(ஒப்புமைப் பாடல்களுடன் கூடிய பதிப்பு)

ப. மணிகண்டன், எம். ஏ., எம். ஃபில்.,
தமிழ்ப்பண்டிதர்,
சரசுவதி மகால் நூலகம்.

முன்னமே பல பதிப்புகளைப் பெற்றுள்ள " மூதுரை " (வாக்குண்டாம்) என்னும் நீதிநூற்கு, ஒப்புமைப் பாடல்களுடன் ஒரு பதிப்பை நாம் உருவாக்க வேண்டும் எனும் விழைவில் மலர்ந்ததே இச்சிறுபதிப்பாகும்.

சரசுவதி மகால் நூலகத் தமிழ்த்துறையில் இடம்பெற்றுள்ள மூதுரைச் சுவடிகளுள் 815 (a) எனும் எண்ணிட்ட சுவடியை அடிப்படைச் சுவடியாகக் கொண்டும் பிற சுவடிகளையும், மர்ரே பதிப்புநூல், கழகத்தின் நாட்டார் உரைப் பதிப்புநூல், சரவணபுரம் சண்முக முதலியாரால் பார்வையிடப்பட்ட அச்சு நூல், தியாகராயசுவாமிகளால் பார்வையிடப்பட்ட அச்சுநூல், பாரிப்பாக்கம் முனியப்ப முதலியாரால் பார்வையிடப்பட்ட அச்சுநூல் ஆகியனவற்றையும் ஒப்புநோக்கியும் இப்பதிப்பு உருப்பெற்றுள்ளது. பாடவேறுபாடுகள் தொகுக்கப் பெற்று, அவை இப்பதிப்பில் மூதுரைப் பாக்களுக்குக் கீழே குறிப்பிடப் பெற்றுள்ளன.

மூதுரை நூற்பாக்களின் கருத்துகளையும், உவமைகளையும் ஒத்த பாக்கள், புறநானூறு, கலித்தொகை, திருக்குறள், பழமொழி நானூறு, நாலடியார், தனிப்பாடற்றிரட்டு, அறப்பளீசுர சதகம், குமரேச சதகம், திருவேங்கட சதகம், நீதிவெண்பா, நீதிபோதவெண்பா, பஞ்சதந்திரப்பாடல், வெற்றிவேற்கை, ஆத்திசூடிவெண்பா, நீதிசாரம், விவேகசிந்தாமணி, சாணக்கியநீதி வெண்பா, நீதிசாஸ்திரம் (வடமொழி) ஆகிய நூல்களினின்று இப்பதிப்பில் ஒப்புமையாகக் காட்டப்பெற்றுள்ளன.

பாடவேறுபாடு சுட்டும் பகுதியில், பாடல் எண்ணை அடுத்து இடம் பெறும் எண்கள், முறையே பாடலின் அடி எண்ணையும் சீர் எண்ணையும் குறிப்பனவாகும். பாடவேறுபாடாகக் காட்டப்பெறும் சொல்லை அடுத்து இடம்பெறும் எண், மூதுரைச் சுவடி எண்ணாகும். இப்பதிப்பின் சுற்றில் பாட்டு முதற்குறிப்பும், சொல்லடைவும் இடம்பெறுகின்றன.

இச்சிறு பதிப்பு, தமிழாய்வாளர்க்கும் தமிழன்பர்க்கும் பயன்படுமென நம்புகின்றேன்.

பரு. — மூ.

ஔவையார் இயற்றிய மூதுரை

(ஒப்புமைப் பாடல்களுடன் கூடிய பதிப்பு)

கடவுள் வாழ்த்து

வாக்குண்டாம் நல்ல மனமுண்டாம் மாமலராள்
நோக்குண்டாம் மேனி நுடங்காது—பூக்கொண்டு
துப்பார் திருமேனித் தும்பிக்கை யான்பாதம்
தப்பாமற் சார்வார் தமக்கு. 0

நூல்

நன்றி ஒருவற்குச் செய்தக்கால் அந்நன்றி
என்று தருங்கொல் எனவேண் டா—நின்று
தளரா வளர்தெங்கு தாளுண்ட நீரைத்
தலையாலே தான்தருத லால். 1

நல்லார் ஒருவர்க்குச் செய்த உபகாரம்
கல்மேல் எழுத்துப்போற் காணுமே—அல்லாத
ஈரமிலா நெஞ்சத்தார்க்(கு) ஈந்த உபகாரம்
நீர்மேல் எழுத்துக்கு நேர். 2

பாடவேறுபாடு

பாடல் எண் 0. 2 : 1 நோக்குண்டு 1183

1. 3 : 3 தாளுண்ட

2. 4 : 2 எழுத்திற்கு 1182, 1183. & மர்రే பதிப்பு,
கழகத்தின் நாட்டார் உரைப்பதிப்பு.

இன்னா இளமை வறுமைவந்(து) எய்தியக்கால்
இன்னா அளவில் இனியவும் — இன்னாத
நாளல்லா நாட்பூத்த நன்மலரும் போலுமே
ஆளில்லா மங்கைக்(கு) அழகு. 3

வேறுபாடு

3 : 1 நாளில்லா 1182, 1183. சரவணபுரம் சண்முக முதலியாரால் பார்வையிடப்பட்ட அச்சுநூற்பாடம்.

3. நாளிலா நாள் பூத்த நறுமலரும் போன்றதே 718 b

மை

வறியவன் இளமைபோல் வாடிய சினையவாய்

—கலித்தொகை, பாலைக்கலி 10

கொடியது கேட்கின் நெடியவெவ் வேலோய்
கொடிது கொடிது வறுமை கொடிது
அதனினுங் கொடிது இளமையில் வறுமை.

—ஔவையார் தனிப்பாடல் 54

கொழுந னில்லா மடவார்......
...இவைதம்மி னேதுபலனுண்டு கண்டாய்.

—அறப்பளீசுர சதகம் 10

காந்தனில் லாத கனங்குழலாள் பொற்பவமாம்

—நீதிவெண்பா 6

பதியிலார் அழகும் பாழே! —பஞ்சதந்திரப்பாடல் 89

அட்டாலும் பால்சுவையிற் குன்றா(து) அளவளாய்
நட்டாலும் நண்பல்லார் நண்பல்லர் *
கெட்டாலும் மேன்மக்கள் மேன்மக்க ளே!சங்கு
சுட்டாலும் வெண்மை தரும். 4

பாடவேறுபாடு

அட்டாலும் பால்சுவையிற் குன்றா தளவல்ல
நட்டாலும் நண்பல்லார் நண்பல்லர் — கெட்டாலும்
மேன்மக்கள் மேன்மக்க ளேசங்கு சுட்டாலும்
தான்மிக்க வெண்மை தரும்.

— பனைச் சரவணபுரம் சண்முக முதலியாரால் பார்வையிடப்பட்ட அச்சுநூல், தியாகராய சுவாமிகளாற் பார்வையிடப்பட்ட அச்சுநூல் ஆகிய மூதுரைப் பதிப்பு நூல்களில் இவ்வடிவில் இப்பாடல் இடம்பெற்றுள்ளது.

* வெண்பாவின் (ஈற்றடியே முச்சீரடியாக வரும்) ஈற்றடி அல்லாத பிற அடிகளும் ஓரோ வழி முச்சீரான் வரும் என்று கூறும் பேராசிரியரும் நச்சினார்க்கினியரும் தம் தொல்காப்பியச் செய்யுளியல் உரையில் (நூற்பா 62இன் உரை) அதற்குச் சான்றாக இம் "மூதுரைப்" பாடலை எடுத்துக்காட்டுவர்.

ஒப்புமை

அடினும் ஆவின்பால் தன்சுவை குன்றாது.
பெருமையும் சிறுமையும் தான்தர வருமே. —வெற்றிவேற்கை 23, 30

தக்போல் சுவறிடக் காய்ச்சினு மதுகொண்டு
சாரமது ஏங்குறையுமோ?
கற்றபெரி யோர்மகிமை யற்பரறி கிலரேனும்
காசினி தனிற்போகுமோ? —அறப்பளீசுர சதகம் 23

பொங்கமிகு சங்குசெந் தழலில்வெந் தாலுமே
பொலிவெண்மை குறைவுறாது
போதவே காய்ந்துநன் பால்குறுகி னாலும்
பொருந்துசுவை போய்விடாது
தொன்மைதரு பெரியோர் மடிந்தாலு மவர்களது
தூயநிறை தவறாகுமோ? —குமரேச சதகம் 17

பொன்னும் சுரும்பும் புகழ்பாலும் சந்தனமும்
சின்னம் படவருத்தம் செய்தாலும் —முன்னிருந்த
நற்குணமே தோன்றும் நலிந்தாலும் உத்தமர்பால்
நற்குணமே தோன்றும் நயந்து. —நீதிவெண்பா 64

கன்னலும் பாலும் கனகமும் சந்தனமும்
என்னகண்டித் தாலும் இயல்பகலா — அன்னவைபோல்
வேலவ!சான் றோரை மிகவருத்தி னும்தமது
சீலநலங் குன்றிவிடா தே. —நீதிபோதவெண்பா 45

அடுத்து முயன்றாலும் ஆகுநாள் அன்றி
எடுத்த கருமங்கள் ஆகா— தொடுத்த
உருவத்தால் நீண்ட உயர்மரங்கள் எல்லாம்
பருவத்தால் அன்றிப் பழா. 5

உற்ற இடத்தில் உயிர்வழங்குந் தன்மையோர்
பற்றலரைக் கண்டாற் பணிவரோ—கற்றூண்
பிளந்திறுவ(து) அல்லால் பெரும்பாரந் தாங்கின்
தளர்ந்து வளையுமோ தான். 6

நீரளவே ஆகுமாம் நீராம்பல் தான்கற்ற
நூலளவே ஆகுமாம் நுண்ணறிவு—மேலைத்
தவத்தளவே ஆகுமாம் தான்பெற்ற செல்வம்
குலத்தளவே ஆகும் குணம். 7

பாடவேறுபாடு

பாடல் எண் 6. 3 : 1 பிளந்திடுவ(து) —சரவணபுரம் சண்முக முதலியாரால் பார்வையிடப்பட்ட அச்சுநூற் பாடம், தியாகராய சுவாமிகளாற் பார்வையிடப்பட்ட அச்சுநூற் பாடம்.

ஒப்புமை

பாடல் எண் 6: கனபார மேறிற் பிளந்திடுவ தன்றியே
கற்றூண் வளைந்திடாது
—குமரேச சதகம் 66

பாடல் எண் 7. வெள்ளத் தனைய மலர்நீட்டம் மாந்தர்தம்
உள்ளத் தனைய துயர்வு. —திருக்குறள் 595

இரவலர் தம்வரிசை என்பார் மடவார்;
கரவலராய்க் கைவண்மை பூண்ட—புரவலர்
சீர்வரைய ஆகுமாம் செய்கை சிறந்தனைத்தும்
நீர்வரைய வாம்நீர் மலர். —பழமொழி 381

நல்லாரைக் காண்பதுவும் நன்றே நலமிக்க
நல்லார்சொற் கேட்பதுவும் நன்றேஎ—நல்லார்
குணங்கள் உரைப்பதுவும் நன்றே அவரோ(டு)
இணங்கி இருப்பதுவும் நன்று. 8

தீயாரைக் காண்பதுவுந் தீதே திருவற்ற
தீயார்சொற் கேட்பதுவுந் தீதேஎ—தீயார்
குணங்கள் உரைப்பதுவுந் தீதே அவரோ(டு)
இணங்கி இருப்பதுவுந் தீது. 9

நெல்லுக்(கு) இறைத்தநீர் வாய்க்கால் வழியோடிப்
புல்லுக்கும் ஆங்கே பொசியுமாம்—தொல்லுலகில்
நல்லார் ஒருவர் உளரேல் அவர்பொருட்(டு)
எல்லார்க்கும் பெய்யும் மழை. 10

பாடவேறுபாடு

பாடல் எண். 10. 3 : 3, 4

'உளரே அவர்பொருட்டு' என்றும் பாடம்—எனும் குறிப்பு ந. மு. வே, வின் உரையுடன் கூடிய கழகப் பதிப்பில் உள்ளது.

பண்டு முளைப்ப(து) அரிசியே யானாலும்
விண்டுமி போனால் முளையாதாம்—கொண்டபேர்
ஆற்றல் உடையார்க்கும் ஆகா(து) அளவின்றி
ஏற்ற கருமஞ் செயல். 11

மடல்பெரிது தாழை மகிழ்இனிது கந்தம்
உடல்சிறியர் என்றிருக்க வேண்டா—கடல்பெரிது
மண்ணீரும் ஆகா(து) அதனருகே சிற்றூறல்
உண்ணீரு மாகி விடும். 12

பாடவேறுபாடு

பாடல் எண். 11. 2 : 1, 2, 3 விண்டுமிபோ னாலும் விளையாதாம் (1715)

2 : 3, 4 விளையாது கொண்டதோர் (1613)

2 : 3 விளையாதாம் (தியாகராய சுவாமிகளாற் பார்வையிடப்பட்ட அச்சுநூல்)

12. 2 : 3 வேண்டாம் (,,)

ஒப்புமை

பாடல் எண். 12

தெண்ணீர்ப் பரப்பின் இமிழ்திரைப் பெருங்கடல்
உண்ணா ராகுப நீர்வேட் டோரே!
ஆவும் மாவுஞ் சென்றுணக் கலங்கிச்
சேறொடு பட்ட சிறுமைத் தாயினும்
உண்ணீர் மருங்கின் அதர்பல வாகும். —புறநானூறு 204

மல்கு திரைய கடற்கோட் டிருப்பினும்
வல்லூற் றுவரில் கிணற்றின்கட் சென்றுண்பர்,
செல்வம் பெரிதுடைய ராயினும் சேட்சென்றும்
நல்குவார் கட்டே நசை. —நாலடியார் 263

எறிநீர்ப் பெருங்கடல் எய்தி யிருந்தும்
அறுநீர்ச் சிறுகிணற் றூறல்பார்த் துண்பர்,
மறுமை யறியாதா ராக்கத்தின் சான்றோர்
கழிநல் குரவே தலை. —நாலடியார் 275

கவையாகிக் கொம்பாகிக் காட்டகத்தே நிற்கும்
அவையல்ல நல்ல மரங்கள் — சவை நடுவே
நீட்டோலை வாசியா நின்றான் குறிப்பறிய
மாட்டா தவன்நல் மரம். 13

கான மயிலாடக் கண்டிருந்த வான்கோழி
தானு மதுவாகப் பாவித்துத் — தானுந்தன்
பொல்லாச் சிறகைவிரித் தாடினாற் போலுமே
கல்லாதான் கற்ற கவி. 14

பாடவேறுபாடு

பாடல் எண். 13. 4 : 2 தவனே 1183, 1715, 718(b) & தியாகராய சுவாமிகளால் பார்வையிடப்பட்ட அச்சுநூல்.

ஒப்புமை

பாடல் எண் 13.

சபையிற் குறிப்பறிய மாட்டாமல் நின்றவர்
தாம்பயன் இலாதமரமாம். —குமரேச சதகம் 40

சற்றெனினு மொருகல்வி யறியாத கயவனே
தாங்குமுயிர் கொண்டமரமாம்.
—திருவேங்கட சதகம் 54

பாடல் எண் 14.

பச்சைமயி லாடுதற்(கு) இணையென்று வான்கோழி
பாரில்ஆ டுதல்போலவும்
—குமரேச சதகம்-அவையடக்கம்

வேங்கை வரிப்புலிநோய் தீர்த்த விடதாரி
ஆங்கதனுக்(கு) ஆகாரம் ஆனாற்போல்—பாங்கறியாப்
புல்லறி வாளர்க்குச் செய்த உபகாரம்
கல்லின்மேல் இட்ட கலம். 15

அடக்கம் உடையார் அறிவிலர்என்(று) எண்ணிக்
கடக்கக் கருதவும் வேண்டா—மடைத்தலையில்
ஓடிமீன் ஓட உறுமீன் வருமளவும்
வாடி இருக்குமாங் கொக்கு. 16

பாடவேறுபாடு

பாடல் எண் 15 1 : 4 விடகாரி — மர்ரே பதிப்பு, கழகத்தின் நாட்டார் உரைப்பதிப்பு.

16. 3 : 1 ஓடுமீன் — ,, ,, ,,

3. ஓடுமீன் ஓடி ஒருமீன் வருமளவும் — சரவணபுரம் சண்முக முதலியாரால் பார்வையிடப்பட்ட அச்சுநூற்பாடம்.

ஓடிமீன் ஓடி ஒருமீன் வருமளவும் — தியாகராய சுவாமிகளாற் பார்வையிடப்பட்ட அச்சுநூற்பாடம்.

ஒப்புமை

பாடல் எண். 15 (மேற்கோள்)

வேங்கை வரிப்புலிநோய் தீர்த்தவிட தாரியென
ஓங்குமௌவை சொன்னமுது ரைப்பொருள்பார்—பாங்குடைய
காமாற்றும் புன்னைவனக் காராளா யானதனா
லேமூர்க்க ரோடிணங் கேல். —ஆத்திசூடிவெண்பா

✳ பஞ்சதந்திரப் பாடல்—'அசம்பிரேட்சிய காரித்துவத்'தில் இடம் பெற்றுள்ள 'சிங்கத்தைப் பிழைப்பித்துச் செத்த கதை' இத்துடன் ஒப்பு நோக்கத்தக்கது. 'நீதிசாரத்'தின் 18-ஆம் பாடலும் 'விவேக சிந்தாமணி'யின் '63' ஆம் பாடலும் கூறும் நீதியும் இப்பாடலின் நீதியும் ஒன்றேயாகும்.

பாடல் எண் 16.

கொக்கொக்க கூம்பும் பருவத்து மற்றதன்
குத்தொக்க சீர்த்த இடத்து. —குறள் 490

அற்ற குளத்தின் அறுநீர்ப் பறவைபோல்
உற்றுழித் தீர்வார் உறவல்லர் அக்குளத்திற்
கொட்டியும் ஆம்பலும் நெய்தலும் போலவே
ஒட்டி உலர்வார் உறவு. 17

சீரியர் கெட்டாலும் சீரியர் சீரியரே
அல்லாதார் கெட்டாலங்(கு) என்னாகும் சீரிய
பொன்னின் குடமுடைந்தாற் பொன்னாகும் என்னாகும்
மண்ணின் குடமுடைந்தக் கால். 18

ஆழ அமுக்கி முகக்கினும் ஆழ்கடல்நீர்
நாழி முகவாது நால்நாழி—தோழி
நிதியுங் கணவனும் நேர்படினும் தம்தம்
விதியின் பயனே பயன். 19

பாடவேறுபாடு

பாடல் எண் 17. 4 : 2 உறுவார் 1182, 1183, &
மர்ரே பதிப்பு, கழகத்தின் நாட்டார் உரைப்பதிப்பு, பாரிப்பாக்கம் முனியப்ப முதலியாரால் பார்வையிடப்பட்ட அச்சுநூல்.

18. 1 : 3, 4 சீரியரே சீரியர் மற்(று)
—மர்ரே பதிப்பு, நாட்டார் உரைப்பதிப்பு.

1 : 4 சீரியர்மற்(று)
2 : 2, 3, 4 கெட்டாலு மல்லாதா—ரல்லாதார்
—சரவணபுரம் சண்முக முதலியாரால் பார்வையிடப்பட்ட அச்சுநூல்.

19. 1 : 3 முகப்பினும் ,, ,, ,,

1 : 4 'ஆழ்கடலில்' என்றும் பாடம்- -எனும் குறிப்பு
ந. மு. வே, வின் உரையுடன் கூடிய கழகப் பதிப்பில் உள்ளது.

ஒப்புமை

பாடல் எண். 17

வாவிதனி லாம்பல்கொட் டிகளதனி னீர்வற்றின்
வற்றிடும் பெருகிலுயரும்
சேர்ந்தோர்க் கிடுக்கிண் ந்து வந்தாலு நல்லோர்
சிநேகமிப் படியாகுமே! —குமரேச சதகம் 48

உடன்பிறந்தார் சுற்றத்தார் என்றிருக்க வேண்டா
உடன்பிறந்தே கொல்லும் வியாதி—உடன்பிறவா
மாமலையில் உள்ள மருந்தே பிணிதீர்க்கும்
அம்மருந்து போல்வாரும் உண்டு. 20

இல்லாள் அகத்திருக்க இல்லாத(து) ஒன்றில்லை
இல்லாளும் இல்லாளே ஆமாயின்—இல்லாள்
வலிகிடந்த மாற்றம் உரைக்குமேல் அவ்வில்
புலிகிடந்த தூறாய் விடும். 21

எழுதியவா றாமென் றிராமட நெஞ்சே
கருதியவா றாமோ கருமம்—கருதிப்போய்க்
கற்பகத்தைச் சேர்ந்தோர்க்குக் காஞ்சிரங்காய் ஈந்ததேல்
முற்பவத்திற் செய்த வினை. 22

பாடவேறுபாடு

பாடல் எண். 21. 3 : 3, 4 உரைக்குமோஅவ் வில்லம் 1715

22. 1 : 2, 3 றேகாண் இரங்குமட

—மர்ரே பதிப்பு, நாட்டார் உரைப்பதிப்பு

ஒப்புமை

பாடல் எண். 20

அன்னிய னேனும் தன்னால் ஆனதோர் உதவி செய்யின்
உன்னிய பந்து வாகும்; உயர்ந்திடு பந்து வேனும்
பன்னிய கெடுதி பண்ணின் பகைவனாம்; பகைத்து மெய்யில்
மன்னிய பிணிதான் காட்டின் மருந்தினால் தீரு மாறே.

—நீதிசாரம் 70

கற்பிளவோ(டு) ஒப்பர் கயவர் கடுஞ்சினத்துப்
பொற்பிளவோ(டு) ஒப்பாரும் போல்வரே—விற்பிடித்து
நீர்கிழிய எய்த வடுப்போல மாறுமே
சீரொழுகு சான்றோர் சினம். 23

நற்றா மரைக்கயத்தில் நல்லன்னஞ் சேர்ந்தாற்போல்
கற்றாரைக் கற்றாரே காமுறுவர்—கற்பில்லா
மூர்க்கரை மூர்க்கர் முகப்பர் முதுகாட்டிற்
காக்கை உகக்கும் பிணம். 24

நஞ்சுடைமை தானறிந்து நாகங் கரந்துறையும்
அஞ்சாப் புறங்கிடக்கும் நீர்ப்பாம்பு—நெஞ்சிற்
கரவுடையார் தம்மைக் கரப்பர் கரவார்
கரவிலா நெஞ்சத் தவர். 25

பாடவேறுபாடு

பாடல் எண். 23. 4 : 1 சீர்பெரிய 718b

ஒப்புமை

பாடல் எண் 24.

தாமரை மலரில் அன்னம் உறைவதாகக் காட்சிப்படுத்தலும் தாமரையையும் அன்னத்தையும் இணைத்துக் கூறலும் தமிழிலக்கிய மரபுகளில் ஒன்றாகும்.

சான்று:

பொய்கையங் கமலக் கானிற் பொலிவதோ ரன்ன மென்ன
—கம்பராமாயணம்-பால. 64

என் ஆவிக் கமலத்து அமர் அன்னமே!
—தஞ்சைவாணன் கோவை 38

அங்கயத்துள் நிறை பங்கயத்துள்உறை அன்னமே!
—காவடிச்சிந்து-11 தலைவி இரங்கல்

செங்கமல நாண்மலர்மேல் தேனுகரும் அன்னம்போல்
—நாச்சியார் திருமொழி 7: 7

பாடல் எண். 25

நஞ்சுடையேம் என்றொளிக்கும் நாகமதில் நீர்ப்பாம்பு
சஞ்சரிக்கும் எங்கணும்அத் தன்மையில்மா—வஞ்சர்தமைத்
தாமறைப்பர் தூயர் தமைமறையார் கந்த! தொண்டர்
பால்மறையும் கூற்றையுமொப் பா. —நீதிபோதவெண்பா 95

மன்னனு மாசறக் கற்றோனுஞ் சீர்தூக்கின்
மன்னனிற் கற்றோன் சிறப்புடையன்—மன்னற்குத்
தன்தேச மல்லாற் சிறப்பில்லை கற்றோற்குச்
சென்றஇட மெல்லாம் சிறப்பு. 26

கல்லாத மாந்தர்க்குக் கற்றுணர்ந்தோர் சொற்கூற்றம்
அல்லாத மாந்தர்க்(கு) அறங்கூற்றம்—மெல்லிய
வாழைக்குத் தானீன்ற காய்கூற்றம் கூற்றமே
இல்லிற்(கு) இசைந்தொழுகாப் பெண். 27

பாடவேறுபாடு

பாடல் எண். 26. 2 : 4 மன்னனுக்குத்

ஒப்புமை

பாடல் எண். 26

சொல்லணிசேர் கல்வித் துறைபோய பண்டிதர்தாம்
வெல்லுமிகல் வேந்தரினும் மிக்கவர்காண்—சொல்லுங்கால்
வேந்தர்க்குத் தந்நாடே மேன்மைதரும் பண்டிதர்க்குச்
சேர்ந்தவிட மெல்லாஞ் சிறப்பு.

கற்றவர்க்குப்—பேணியுற்ற
நாடெல்லாம் வேறன்று.

—சாணக்கிய நீதிவெண்பா

(சுன்னாகம் குமாரசாமிப் புலவரின் மொழிபெயர்ப்பு நூல்)

வித்தையே யுளதால்...... உயர்திசை யெங்குற்றாலும்
மெத்தவும் புகழுண்டாகும். —நீதிசாரம் 33

மற்ற விறைவனு மியங்குமென்றுங்
காக்கின்ற புவிக்குமேரைக் கற்றவர் தேசமெங்கு
மாக்குநல் லிடங்களெல்லாம் பூச்சிய னாவனன்றே.

—நீதிசாரம் 72

ஒப்புமைத் தொடர்ச்சி

स्वगृहे पूज्यते मूर्खः स्वग्रामे पूज्यते प्रभुः ।
स्वदेशे पूज्यते राजा विद्वान् सर्वत्र पूज्यते ॥

—நீதிசாஸ்திரம் 88

(மூர்க்கன் தன் வீட்டிலும், பிரபு தன் கிராமத்திலும், ராஜா தன் தேசத்திலும், வித்வான் எல்லாவிடத்திலும் பூஜிக்கப்படுவர்.)

பாடல் எண். 27

கல்லா ஒருவர்க்குத் தம்வாயில் சொற்கூற்றம்;
மெல்லிழை வாழைக்குத் தான்ஈன்ற காய்கூற்றம்;
அல்லவை செய்வார்க்(கு) அறங்கூற்றம்; கூற்றமே
இல்லிருந்து தீங்கொழுகு வாள். —நான்மணிக்கடிகை 82

எறியென் றெதிர்நிற்பாள் கூற்றம்; சிறுகாலை
அட்டில் புகாதாள் அரும்பிணி;—அட்டதனை
உண்டி யுதவாதாள் இல்வாழ்பேய்; இம்மூவர்
கொண்டானைக் கொல்லும் படை. —நாலடியார் 363

கல்லா தவர்க்குவரக் கற்றவர்சொல்; நற்றருமம்
இல்லா தவர்க்கதுவே; இல்லத்திற்—சொல்லடங்காக்
கன்னி; கதலிக்குக் காய்நமனாம்; கந்த! அன்பர்
இன்னலுக்கு நீயே யமன். —நீதிபோதவெண்பா 89

'கூற்றம் கூற்றம்' என அடுக்கிச் சொல்லும் உத்தியுடைய இன்னொரு பாடல்:—

சிலம்பிக்குத் தன்சினை கூற்றம்;நீள் கோடு
விலங்கிற்குக் கூற்றம்; மயிர்தான்—வலம்புடா
மாவிற்குக் கூற்றம்ஆம்; ஞெண்டிற்குத் தன்பார்ப்பு;
நாவிற்கு நன்றல் வசை. —சிறுபஞ்சமூலம் 9

சந்தன மென்குறடு தான்தேய்ந்த காலத்துங்
கந்தங் குறைபடா(து) ஆதலால்—தந்தந்
தனஞ்சிறியர் ஆயினுந் தார்வேந்தர் கேட்டால்
மனஞ்சிறியர் ஆவரோ மற்று. 28

மருவினிய சுற்றமும் வான்பொருளும் நல்ல
உருவும் உயர்குலமும் எல்லாம்—திருமடந்தை
ஆம்போ(து) அவளோடும் ஆகும் அவள்பிரிந்து
போம்போ(து) அவளோடும் போம். 29

சாந்தனையும் தீயனவே செய்திடினும் தாமவரை
ஆந்தனையும் காப்பர் அறிவுடையோர்—மாந்தர்
குறைக்குந் தனையுங் குளிர்நிழலைத் தந்து
மறைக்குமாங் கண்டீர் மரம். 30

பாடவேறுபாடு

பாடல் எண். 28. 3 : 4 'கெட்டால்' என்றும் பாடம்—எனுங்குறிப்பு
ந. மு. வே. வின் உரையுடன் கூடிய
கழகப்பதிப்பில் இடம்பெற்றுள்ளது.

ஒப்புமை

பாடல் எண் 28.

அரைக்கினுஞ் சந்தனந் தன்மண மறாது. —வெற்றிவேற்கை 25

பொன்னும் கரும்பும் புகழ்பாலுஞ் சந்தனமுஞ்
சின்னம் படவருத்தஞ் செய்தாலும்—முன்னிருந்த
நற்குணமே தோன்று நலிந்தாலு முத்தமர்பால்
நற்குணமே தோன்று நயந்து. —நீதிவெண்பா 64

தறிபட்ட சந்தனக் கட்டை பழுதாயினும்
சார்மணம் பழுதாகுமோ? —அறப்பளீசுர சதகம் 23

சந்தனக் குறடுதான் மெலிந்துதேய்ந் தாலுமே
தன்மணங் குன்றிடாது.
தொன்மைதரு பெரியோர் மடிந்தாலு மவர்களது
தூயநிறை தவறாகுமோ!

—குமரேச சதகம் 17

பாட்டு முதற்குறிப்பு அகரநிரல்

முதற்குறிப்பு	பாடல் எண்	பக்க எண்
அட்டாலும் பால்சுவையிற்	4	4
அடக்க முடையார்	16	9
அடுத்து முயன்றாலும்	5	5
